# இலக்கு

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 258 | சனி, அக்டோபர் 28, 2023 | 14 பக்கங்கள்




## 1995 மாபெரும் யாழ்ப்பாண இடப்பெயர்வு நினைவுநாள்

ஈழத் தமிழ் மக்கள் சந்தித்த இடப்பெயர்வுகளில் மிகவும் பெரும் துயரை ஏற்படுத்திய பெரும் இடப்பெயர்வாக யாழ் இடப்பெயர்வு கருதப் படுகின்றது.

## வடக்கு மீனவர்கள் பிரச்சினையில் தமிழ் தலைவர்கள் ஏன் மௌனம்?

மீனவர் சமாஜ செயலாளர் **ஆலம்** செவ்வி

## "ஷி யாங் 6" கப்பல் கொழும்பு வருகை



## இந்தியாவிற்கு ஒரு எச்சரிக்கை மணி!

அகிலன்

## எதிரியின் பலம் – பலவீனம் அறிந்து மத்திய கிழக்கில் திறக்கப்பட்டுள்ள களம்

வேல்ஸ் இல் இருந்து: **அருஸ்**



© 2023 இலக்கு இணையம்

## இந்திய - அமெரிக்க எதிர்ப்புக்களை மீறி
# இலங்கை வந்த சீனக் கப்பல்



சீனாவின் ஆய்வுக்கப்பலான சீயான்-6 என்ற கப்பல் கடந்த புதன்கிழமை (25) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த கப்பலின் வருகையை தடைசெய்யுமாறு இந்தியாவும், அமெரிக்காவும் இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகித்த போதும் இலங்கை அதனை புறக்கணித்துள்ளது. இந்த கப்பல் தொடர்பில் தனது எதிர்ப்புக்களை காண்பிக்கும் முகமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெயசங்கர் இந்த மாதம் இலங்கையில் இடம்பெற்ற இந்துசமுத்திர பிராந்திய வலய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதையும் தவிர்க்க முற்பட்டிருந்தார்.

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# "உலக போலியோ தினம் 2023"
## திருகோணமலையில் நினைவு கூரப்பட்டது

திருகோணமலை ரோட்டரி கழகம் சார்பில் "உலக போலியோ தினம் 2023", திருகோணமலை மாதுமை அம்பாள் தமிழ் வித்தியாலய மாணவர்கள் மத்தியில் கடந்த வியாழக்கிழமை (26) நினைவு கூரப்பட்டது.

2023 ஆம் ஆண்டு உலக போலியோ தினத்தின் கருப்பொருள் - "தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான எதிர்காலம்" உலக போலியோ நிலைமை



மற்றும் சர்வதேச ரோட்டரி கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## தவறான மருந்து - இந்தியாவிடம் இழப்பீடு கோருகின்றது கம்பியா



இந்தியாவின் மெய்டன் மருந்து நிறுவனம் தயாரித்த கலப்படமுள்ள இருமல் மருந்தை அருந்தியதால் உயிரிழந்த 70 இற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான இழப்பீட்டை கோரும் வழக்கு கம்பியாவின் உயர் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இந்த மருந்தை அருந்திய 5 வயதுக்கு குறைவான 70 இற்கு மேற்பட்ட சிறுவர்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## கனேடியர்களுக்கான நுழைவு அனுமதி சேவையை இந்தியா மீண்டும் ஆரம்பித்தது

கனடாவில் சீக்கிய குழுவின் தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதில் இந்திய புலனாய்வுத்துறையின் பங்கு இருப்பதாக கனேடிய பிரதமர் மேற்கொண்ட குற்றச் சட்டை தொடர்ந்து இரு நாடுகளுக்கு மிடையில் எழுந்த இரஜதந்திர நெருக்கடிகளை தொடர்ந்து இந்தியாவினால் நிறுத்தப்பட்ட நுளைவு அனுமதி சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கனடாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

கனடாவில் உள்ள தமது இராஜதந்திர பணியாளர்கள் அச்சுறுத்தப்பட்டதால் தான் அதனை நிறுத்தியிருந்தோம். தற்போது பாதுகாப்பு நிலமையை ஆய்வு செய்த பின்னர் பகுதியாக இந்த சேவையை ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## ஹமாஸை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்குமாறு
# இந்தியாவிடம் இஸ்ரேல் கோரிக்கை

கடந்த 7 ஆம் நாள் ஹமாஸ் நடத்திய தாக்குதலால் பொது மக்கள் உயிரிழந்ததை தொடர்ந்து இந்தியா ஹமாஸை பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தான் முன்வைத்துள்ளதாக இந்தியாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் நயோர் கிலோன் தெரிவித்துள்ளார்.


இஸ்ரேலின் பல மட்டங்க



ளில் இருந்து இது தொடர்பான கோரிக்கைகள் இந்திய தரப்பிடம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அல்ஜசீரா ஊடகத்தை நிறுத்துவதற்கு அமெரிக்கா முயற்சி




பாலஸ்தீன - இஸ்ரேல் போரில் அல்ஜசீரா ஊடகம் அதிகளவில் காசாவில் இடம்பெறும் மனிதப் பேரவலங்களை வெளிக் கொண்டு வருவதால் அதனை நிறுத்துமாறு கட்டார் அரசுக்கு அமெரிக்கா அதிக அழுத்தங்களை கொடுத்துவருவதாக அக்சியோஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் உடனான உறவுகளை மாற்றுமாறு அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் அந்தோனி பிளிங்டன் கடந்த வாரம் கட்டாருக்கு சென்றபோது கட்டார் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அல்ஜசீரா ஊடகம் காசா நிலவரம் தொடர்பில் அதிகளவிலான தகவல்களை வெளியிடுவதாகவும், பல தகவல்கள் இஸ்ரேலுக்கு எதிராக இருப்பதாகவும் பிளிங்டன் கட்டார் அரசிடம் தெரிவித்துள்ளார் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

அல்ஜசீரா ஊடகம் பாலஸ்தீன குழுவின் பிராச்சார ஊடகம் என இஸ்ரேல் குற்றம் சுமத்தியுள்ளதுடன், அதனை தடை செய்யும் வழிகளையும் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஹமாஸ் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு - எர்டோகன்

ஹமாஸ் அமைப்பு ஒரு விடுதலைப் போரட்ட அமைப்பு என துருக்கியின் அரச தலைவர் எர்டோகன் தெரிவித்த கருத்துக்கு இஸ்ரேல் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

முழு மேற்குலகமும் ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக கருதுகின்றனர். ஆனால் இஸ்ரேலை அவர்கள் அவ்வாறு பார்ப்பதில்லை. ஆனால் துருக்கி அவ்வாறு ஹமாஸை பார்க்காது. அவர்கள் விடுதலைப்போரட்ட அமைப்பு, பயங்கரவாதிகள் அல்ல. நிலத்தை பாதுகாக்க போரடுகின்றனர். இஸ்ரேல் குழந்தைகளை கொல்கின்றது அதனை நாம் அனுமதிக்க முடியாது. இஸ்ரேலின் இந்த நடவடிகைக்கு மேற்குலகம் முழு ஆதரவுகளை வழங்குகின்றது என தெரிவித்துள்ள துருக்கி அதிபர், இஸ்ரேலையும், முழு உலகத்தையும் நான் ஒன்று கேட்கிறேன்




நீங்கள் மேற்குலகத்திற்கு கடமைப்பட்டிருந்தால் ஹமாஸை பயங்கரவாதிகள் என கூறுங்கள் ஆனால் துருக்கி அப்படி செய்யாது என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கான தனது பயணத்தையும் நிறுத்தியுள்ளதுடன், இஸ்ரேலுடன் மத்திய தரைக்கடல் ஊடாக மேற்கொள்ளவிருந்த எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்தையும் நிறுத்தியுள்ளார். இந்த திட்டம் இன்னும் சில வருடங்களில் ஆரம்பிக்கப்படவிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஆறு இலட்சம் மக்களை வெளியேற்ற அமெரிக்கா திட்டம்



சவுதி அரேபியாவின் அரசர் பின் சல்மான் அமெரிக்க அதிபருடன் மேற்கொண்ட பேச்சுக்களை தொடர்ந்து சவுதி அரேபியா லெபனானில் உள்ள தனது இராஜதந்திரிகளையும், அவர்களின் குடும்பங்களையும் வெளியேற்றிவருகின்றது.

அதேசமயம், இஸ்ரேல் மற்றும் மத்தியகிழக்கில் உள்ள தனது 6 இலட்சம் மக்களை வெளியேற்ற அமெரிக்கா தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை நடந்த மோதல்களில் கிஸ்புல்லா படையினர் 41 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் ஹசன் நஸ்ரெல்லா தெரிவித்துள்ளார். அதேசமயம், ஹிஸ்புல்லாக்களின் தொடர் தாக்குதல்களில் இஸ்ரேலின் பல டாங்கிகளும், பாதுகாப்பு நிலைகளும் அழிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், இஸ்ரேலிய இராணுவம் தமது நவீன மேக்காவா டாங்கிகளை ஹிஸ்புல்லாக்களின்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மற்றோர் நல்லெண்ணத்தை மட்டும் நம்பி போராட விரும்புவோர் வெற்றி பெறுவதில்லை

*பாலஸ்தீனத்திற்கும் - இஸ்ரேலுக்கும் இடையில் ஏற்பட்ட அண்மைய மோதல்களை தொடர்ந்து அப்பாவி மக்கள் மீது இஸ்ரேல் நடத்திவரும் இனப்படுகொலை மற்றும் மனிதப்பேரவலம் என்பது 21 ஆம் நுற்றாண்டின் மிகப்பெரும் இன அழிப்பான முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கு உள்ளாகிய இனமான தமிழ் இனம் சந்தித்த மனிதப்பேரலவத்திற்கு ஒப்பானது.*



*உணவையும், மருந்தையும் போர் ஆயுதமாக்கி, தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி மேற்குலகத்தினதும், இந்தியாவினதும் ஆதரவுகளுடன் இலங்கை அரசு எப்படி ஒரு மிகப்பெரும் இனப்படு கொலையை நிகழ்த்தி பல பத்தாயிரம் மக்களை படுகொலை செய்ததோ அதே போன்றதொரு நிகழ்வை தமிழ் இனம் தற்போது பாலஸ்தீனத்தில் கண்டு கலங்கி நிற்கின்றது.*



*அங்கும் தண்ணீரும், உணவும், மருந்தும் ஆயுதங்களாக பயன்படுத்தப்படுகின்றது. பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசாவின் மக்கள் தொகையில் 50 விகிதமானவர்கள் 18 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் என்று தெரிந்தும் ஒரு சதுர கி.மீ பரப்பளவுக்கு அண்ணளவாக 33 தொன் வெடிமருந்துகளை பயன்படுத்தியுள்ளது இஸ்ரேல்.*

*இந்த செய்தி எழுதப்படும் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அங்கு 7028 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 6474 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களில் 2913 பேர் சிறுவர்கள். இறந்தவர்களில் 2665 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவை தவிர ஏறத்தாள 20,000 மக்கள் காயமடைந்துள்ளனர்.*

*கொல்லப்பட்டவர்களில் 20 இற்கு மேற்பட்டவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள், 24 பேர் ஊடகவியலாளர்கள், ஐ.நாவினால் அடையாளப்படுத்தக்கட்ட 40 இற்கு மேற்பட்ட இடங்களும் தாக்கப்பட்டுள்ளன.*

*இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக உலகின் மிகப்பெரிய அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையினாலோ அல்லது உலக நாடுகளாலோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கமுடியாது உள்ளது என்பது இந்த அமைப்புக்கள் மீதும், ஜனநாயகம் பேசும் உலக நாடுகள் மீதும் மிகப்பெரும் அதிதிருப்திகளை ஏற்படுத்தியுள்ளது.*

*தமிழீழத்தில் இடம்பெற்ற படுகொலைகளையும்*

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

# திருகோணமலையில் ஈழத்தமிழர் இறைமை இழப்பைத் தடுக்க சம்பந்தர் பதவி விலகல் அவசியம்

"சுயநிறைவான தன்னில்தானே தங்கி நிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். மக்கள் தம்மைத் தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறைமையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில் உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்" எனத் தேசியத்தலைவர் மேதகு திரு. வே.பிரபாகரன் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் 1993 யூலை 15ம் நாளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழர் தாயகத்துக்கான உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக நிபுணத்துவம் மிக்க கட்டிடக்கலைஞர்கள், குடிசார் பொறியிலாளர், பொறியியலாளர், விரிவுரையாளர்கள், நில அளவையாளர்கள், முன்னெடுத்த ஆய்வு மாநாட்டிற்கு வழங்கிய வாழ்த்து மொழியில் தெளிவாகத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நிலைப்பாட்டை எடுத்துரைத்திருந்தார். இந்த மக்களின் யாரிலும் தங்கிவாழாத சுதந்திரத்தன்மையையும் சமத்துவத்தையும் சனநாயக மக்களாட்சியையும் கொண்டதாகத் தமிழர் தாயகம் கட்டமைக்கப்பட வேண்டும் என்ற அரசியல் கோட்பாட்டின் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் இந்த ஆய்வுமாநாட்டில் தமிழர் தாயகம் 20 மாநிலங்களாகப் (மாவட்டங்களாகப்) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் நிர்வாகத் தலைமை நகரமும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் திருகோணமலை மாநிலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டுத் திருகோணமலை அம்மாநிலத்தின் நிர்வாக நகரமாக மட்டுமல்லாமல் முழுத்தமிழர் தாயகத்திற்கும் தலைநகரமாகவும் குறிக்கப்பட்டு இருந்தது. குச்சவெளி மாநிலம் மற்றும் மூதூர் மாநிலம் திருகோணமலை மாநிலத்திற்குள் அடக்கப்பட்டு இருந்தது. உண்மையில் திருகோணமலை அனைத்துலக வர்த்தகத்துக்கு மட்டுமல்ல இந்துமாக்கடலின் அமைதி பாதுகாப்பு இரண்டுக்கும் முக்கியமான துறைமுக நகரம்.

அதுவும் சீனாவின் ஷி யான் - 6 ஆய்வுக்கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தான முறையில் இந்தியாவின் வெளிப்படையான எதிர்ப்பையும் மீறி திட்டமிட்டபடி சிறிலங்காவின் நாரா நிறுவனத்துடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வதற்காகக் கொழும்பு துறைமுகத்துக்குள் வந்துள்ளமை சீனா தனது பாதுகாப்புத் தேவைகளுக்கு இலங்கையைப் பயன்படுத்தும் என்பதை உலகுக்கு உறுதி செய்துள்ளது. சீனா தனது 7.7 பில்லியன் கடனில் 4 பில்லியனை கடன் மறு சீரமைப்புக்குள்ளும் 3.7 பில்லியனை தனியார் கடனாக மாற்றி இலங்கையின் கடன் சீரமைப்புக்கு உதவுவது போல தனியார் கடனை உற்பத்திகள் அதிகரிப்பில் வரும் பணத்தில் முதலில் கட்ட வேண்டிய நிலை வருகையில் தான் முதலில் மீளப்பெறுவதற்கான அல்லது இலங்கையின் கடல்வளத்தை நிலவளத்தைத் தனதாக்குவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அத்துடன் வடக்கு கிழக்கில் சீனா 1500 மில்லியனை மீன்பிடி துறையில் முதலிடும் திட்டத்தை முன்னெடுக்க மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேசியுள்ளது. இவை எல்லாம் திருகோணமலைத் துறைமுகத்தைத் தம்வசப்படுத்தும் சீன இந்திய பொருளாதாரப் போட்டி உச்சக்கட்டத்தை அடைவதை வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில் இந்தியா ஈழத்தமிழர்களின் இறைமையுடன் தனது இணைப்புத் தொடர்புகளை கடலிலும் தரையிலும் வானிலும் முன்னெடுத்து ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க முற்படுவதன் மூலமே ஆக்கிரமிப்பாளர் என்ற நிலையில் இல்லாது வடக்கு கிழக்கில் நின்று தன்னைப் பாதுகாக்க வேண்டிய நிலை உருவாகலாம். இதனைத் தடுப்பதற்காகவே திருகோணமலையில் ஈழத்தமிழரின் இறைமையைச் சிறிலங்கா அழிப்பதில் வேகம் கொண்டுள்ளது. இந்நேரத்தில் திருகோணமலையில் சிறிலங்கா மேற்கொள்ளும் ஈழத்தமிழர்களின் இறைமை இழப்புக்குத் தமிழரசுக்கட்சியின் மூத்த தலைவரும் திருகோணமலை மாவட்டச் சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சட்டத்தரணி இரா. சம்பந்தன் அவர்கள் தான் மூலகாரணமாகவுள்ளார். திருகோணமலையில் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் தான் பாராளுமன்ற உறுப்பினர் எனக்கூறிச் சிங்கள அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களில் படைபல ஆதரவுடன் நில ஆக்கிரமிப்புச் செய்து வாழும் சிங்களர்களையும் திருகோணமலையின் குடிகளாக உலகப் பிரகடனம் செய்தவர் திரு.இரா.சம்பந்தன் தான். இதுவே இன்று திருகோணமலையில் ஆக்கிரமித்த நிலங்களைச் சிங்களப் பிக்குகளும், சிங்கள நில ஆக்கிரமிப்பாளர்களும் இணைந்து தங்களுடையது எனக்கூறி அங்கு வாழும் ஈழத்தமிழர்களுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தை உருவாக்கக்கூடிய முறையில் பாராளுமன்றத்தின் உள்ளும் வெளியும் வன்முறைப் பேச்சுக்களைப் பேசுவதற்குக் காரணமாகவுள்ளது. அம்பிட்டிய தேரர் வெளிப்படையாகத் தமிழர்களை வெட்டுவோம் கொத்துவோம் என 303 மில்லியன் அனைத்துலக நாணயநிதி உதவியுடன் மட்டும் தீர்க்க இயலாத பொருளாதார நெருக்கடியைத் திசைமாற்ற இனவெறி மதவெறியைத் தூண்டி மீண்டும் ஒரு இனஅழிப்பை சிறிலங்கா அரசபயங்கரவாதத்தின் துணையுடன் தூண்டும் அளவுக்கு நிலைமை மோசமாகி கொண்டு செல்கிறது. சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி அவர்கள், இந்தோ பசுபிக் பிராந்தியத்துக்கான பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்திகள் அமைச்சர் ஆன்மேரி ட்ரெவல்யான் அவர்களிடம் "பிரித்தானியாவில் பிரிவினைச் சிந்தனையில்லாத புலம்பெயர் தமிழர்களுடன் சிறிலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசையில் உட்காரத் தயார்"எனக் கூறி யாழ்ப்பாண அரசினதும் வன்னியரசினதும் இறைமைகளைக் கைப்பற்றிய அரசு என்ற வகையில் ஈழத்தமிழர்களின் தாயக உரிமையையும் தேசியத்தையும் தன்னாட்சியையும் உறுதிப்படுத்துமாறு பிரித்தானிய அரசிடம் பிரித்தானியத் தமிழர்கள் கோருவதைப் பிரிவினை சிந்தனையாளர்கள் எனச் சுட்டுவதன் மூலம் சிங்களவர்களின் ஈழத்தமிழின அழிப்பை நியாயப்படுத்தி ஈழத்தமிழரை அவர்களின் தேசஇனத்தன்மையில் சமத்துவமாகக் கருதாது தங்கள் ஆட்சியில் வாழும் ஒரு குழுமமாக உலகுக்குக் காட்ட முற்பட்டுள்ளார். இந்நிலையில் அனைத்துலக விசாரணைகள் மூலமான தலையீடுகளே ஈழத்தமிழர்களின் இறைமைப் பாதுகாப்புக்கும் வாழ்வியல் அமைதிக்கும் தேவை. ஆனால் ஈழத்தமிழர்க்கு நீதி வழங்கும் அனைத்துலக விசாரணைகள் எதுவும் வேண்டாம் உள்ளூர் பொறிமுறைகள் மூலமே 2009 சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்புக்கு நீதி பெறத் தாம் விரும்புவதாகக் கூறி ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் அனைத்துலக நீதி விசாரணையைப் பெற இயலாதவாறு தடுத்து நிறுத்தி ஈழத்தமிழின அழிப்புச் செய்த ராசபக்ச குடும்பத்தையும் அவர்களின் ஆணையில் ஈழத்தமிழின அழிப்புச் செய்த சிறிலங்காப்படையினரையும் அனைத்தலக விசாரணையில் இருந்து காப்பாற்றினார். இவ்வாறான பல செயற்பாடுகளைச் சம்பந்தர் தன்னிச்சையாகச் செய்து திருகோணமலை மாவட்டத்தில் ஈழத்தமிழரின் இறைமை இழப்பைச் சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுப்பதற்குப் பக்கத்துணையாகவும் உள்ளார். இவற்றைச் சுட்டிக்காட்டி "இலக்கு" ஆசிரிய தலையங்கம் மூலம் திரு. இரா.சம்பந்தரை பதவி விலகுமாறு கோரி வந்தது. கடந்த வாரத்தில் சிறிலங்காவின் யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் அவர்களும் தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் திரு.சம்பந்தரின் முதுமையின் இயலாமை காரணமாக அவர் பதவி விலக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அவர் தனது கோரிக்கைக்குச் சான்றாக இவ்வருடத்தில் 288 பாராளுமன்ற நாட்களில் 39க்கு மட்டுமே திரு. சம்பந்தர் அவர்கள் பங்கேற்றாலும் பாராளுமன்ற உறுப்பினர்க்கான அவரின் சம்பளமாக 4 மில்லியன் ரூபாவையும் மற்றும் தொடர்புசாதனங்கள் போக்குவரத்து தொகையாக 4 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாயையும் பெற்ற போதிலும் அவரால் செய்யப்பட வேண்டிய பல முக்கிய செயற்பாடுகள் செய்யப்படவில்லை எனக் குற்றமும் சுமத்தியுள்ளார். உண்மையில் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து திரு. இரா.சம்பந்தன் விலகினாலே திருகோணமலையில் ஈழத்தமிழர்களின் இறைமையினை புதிய உறுப்பினர் மூலம் பாதுகாக்க முடியும் என்பது இலக்கின் உறுதியான எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# "ஷி யாங் 6" கப்பல் கொழும்பு வருகை



## இந்தியாவிற்கு ஒரு எச்சரிக்கை மணி!

அகிலன்

சர்ச்சைக்குரிய சீன ஆராய்ச்சிக் கப்பல் "ஷி யாங் 6" இலங்கை வந்து கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப் பட்டது. புதன்கிழமை இரவு இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பலின் வருகையை இந்தியா கடுமையாக அதிருப்தியுடனேயே அவதானித்தது. சீனா இந்தக் கப்பலை உளவு நோக்கங்களுக்காக பயன்படுத்து வதாகவும் இந்தியா குற்றம்சாட்டியது. இந்தியா வின் அக்கறைகளையிட்டு கவனத்திற் கொண்டி ருப்பதாக சொல்லிக் கொண்டே கப்பலுக்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கி யிருக்கின்றது. சீனக்கப்பலின் நடவடிக்கைகளை இந்தியா கூர்மையாக அவதானித்துக் கொண்டி ருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தியாவின் கவலைகள் ஆதாரமற்றவை அல்ல. "ஷி யாங் 6" என்பது மேம்பட்ட சென்சார்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய ஒரு அதிநவீன ஆராய்ச்சிக் கப்பல். இந்தக் கப்பல் கடல்சார் ஆய்வுகள், கடல் உயிரியல் ஆய்வுகள் மற்றும் கடலுக்கு அடியில் உள்ளவை உள்ளிட்ட பல்வேறு வகையான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் கொண்டது. தமது ஆளுகைக்குட்பட்ட ஒரு பகுதிக்குள் தன்னுடைய பரம வைரியான சீனா அதிநவீன புலனாய்வுக் கப்பல் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தியிருப்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் சகித்துக் கொள்ள முடியாத ஒன்றுதான்.

இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள்



குறித்த உளவுத் தகவல்களை சேகரிக்க "ஷி யாங் 6" பயன்படுத்தப்படுவதாக இந்தியா நம்புகிறது. இந்த கப்பல் இந்திய கடற்படை தளங்கள் மற்றும் துறைமுகங்களுக்கு அருகில் பல சந்தர்ப்பங்களில் செயற்படுவதை காண முடிந்தது என இந்தியத் தகவல்கள் தெரிவிக் கின்றன. இந்தியக் கடற்பரப்பை வரைபடமாக் குவதற்கும், இந்திய கடற்படை நகர்வுகள் குறித்த தரவுகளை சேகரிப்பதற்கும் இந்தக் கப்பலை சீனா பயன்படுத்துகிறது என்ற கவலை இந்தியாவுக்குள்ளதையும் புரிந்துகொள்ள முடி கின்றது. அதற்குத் தேவையான அனைத்து அதிநவீன வசதிகளையும் கொண்டதாகவே இந்தக் கப்பல் உள்ளது என்பதும் உண்மை.

### இலங்கையின் முடிவு

"ஷி யாங் 6" கப்பலை கொழும்பில் நிறுத்த அனுமதிக்கும் முடிவை இலங்கை எடுத்தது. இந்தக் கப்பல் சட்டப்பூர்வமான விஞ்ஞானப் பணியில் இருப்பதாகவும், இது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இந்தியாவைச் சமாளிப்பதற்காக இந்தக் கப்பலுக்கு இலங்கைவர அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்த போதிலும், இலங்கைக்கு வருவதென்ற முடிவில் சீனா உறுதியாக இருந்துள்ளது. இந்தியாவின் அழுத்தங் களால் இலங்கை இது போன்ற ஒரு முடிவை எடுப்பதற்கு அனுமதிப்பதில்லை என்பது சீனா வின் நிலைப்பாடாக இருந்திருக்க வேண்டும்.

இந்தக் கப்பல் இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் நாரா எனப்படும் இலங்கையின் கடல்வள ஆய்வு நிலையத்தின் பங்களிப்போடு ஆய்வுகளை மேற்கொள்வதற்காகத்தான் வந்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. இப்போதும் அவ் வாறுதான் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்தியவை எதிர்கொள்வதற்காக இலங்கை அரச சார்பில் மற்றொரு தகவல் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, தமக்குத் தேவையான உணவு, எரிபொருள் போன்றவற்றைப் பெறுவதற்காகவே இந்தக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது என்றும், அது இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப் படவில்லை என்றும் இலங்கை வெளிவிவாகார அமைச்சின் பேச்சாளர் கபில பொன்சேகா தெரிவித் திருக்கின்றார்.

இந்தக் கப்பல் கடல்சார் அளவீட்டு பணி களில் ஈடுபடும் வல்லமையைக் கொண்டுள்ளது. ஆனால், கடல் படுகை சார் அளவீடுகளை மேற்கொள்வதற்கும் இந்தக் கப்பலை சீனா பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இதுதான் ஆபத்தானது. இதன்மூலம் இந்தோ - பசிபிக் கடலில் எதிர்காலத்தில் சீனக் கடற்படையினர் தமது நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு வசதியாகவும், தமது கடற்படைக் கப்பல்கள் பயணிப்பதற்கான பாதைகளை வகுப்பதற்காகவும், இந்த ஆய்வுக் கப்பலைப் பயன்படுத்த முடியும். இந்தக் கப்பல் மூன்று நாட்களுக்குத்தான் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### இந்தியாவின் அக்கறை

இலங்கை அரசாங்கம் என்னதான் சொன்னாலும், இந்தியாவின் கவலைகள் நீடிக்க வாய்ப்புள்ளது. "ஷி யாங் 6" கொழும்பிற்கு வந்திருப்பது, இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதற்கான அறிகுறியாகும். தென்னாசியப் பிராந்தியத்தில் குவாட் போன்ற அமைப்புக்களை உருவாக்கி சீனாவின் செல் வாக்கை எதிர்கொள்ள இந்தியா முயற்சித்து வருகிறது. இருப்பினும், "ஷி யாங் 6" இன் வருகையானது, இப்பகுதியில் சீனாவின் வளர்ந்து வரும் பிரசன்னத்தை எதிர்கொள்வதில் இந்தியா இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதை உணர்த்துகின்றது.

"ஷி யாங் 6" கப்பலின் கொழும்பு வருகை இந்தியாவிற்கு பல தாக்கங்களை ஏற்படுத்தும். முதலாவதாக, இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை உறுதிப்படுத்துவதாக இருக்கும். சமீப வருடங்களாக இப்பகுதியில் உள்கட்ட மைப்பு மற்றும் துறைமுக மேம்பாட்டில் சீனா அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது. இது இந்தியாவின் கொல்லைப்புறமாக இருக்கும் இந்தியப் பெருங்கடலில் சீனாவுக்கு ஒரு மூலோ பாயக் காலடியை அளித்துள்ளது. இதனை மேலும் பலப்படுத்தவும், விரிவாக்கவும், எதிர்காலத் திட்டங்களுக்கும் இந்தக் கப்பலின் வருகையை சீனா பயன்படுத்தும்.

இரண்டாவதாக, "ஷி யாங் 6" இன் வருகை இப்பகுதியில் சீனாவின் நோக்கங்கள் பற்றிய கவலையை எழுப்புகிறது. இந்திய இராணுவ நடவடிக்கைகள் குறித்த புலனாய்வுத் தகவல்களை சேகரிக்க சீனா இந்த கப்பலை பயன்படுத்துவதாக புதுடில்லி நம்புகிறது. இந்தியாவுடன் இடம் பெறக்கூடிய ஒரு மோதலின் போது இது சீனாவுக்கு ஒரு மூலோபாய நன்மையை அளிக்கும்.

மூன்றாவதாக, "ஷி யாங் 6" இன் வருகை இலங்கையுடனான இந்தியாவின் உறவை சிக்கலாக்குகிறது. இலங்கை கடந்த காலத்தில் இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக இருந்தது. எவ்வாறாயினும், பொருளாதார உதவிகளுக்காக இலங்கையும் சீனாவை பெரிதும் சார்ந்துள்ளது. இது இந்தியா மற்றும் சீனாவுடனான உறவை சமநிலைப்படுத்த வேண்டிய நிலையில் இலங் கையை இக்கட்டான நிலைக்கு தள்ளியுள்ளது. இருந்த போதிலும் இந்தியாவின் பாதுகாப்பு அக் கறைகளையும் மீறி இந்தக் கப்பலை அனுமதித்தது இலங்கை - இந்திய உறவுகளில் ஒரு கீறலை ஏற்படுத்துவதாக அமையலாம்.

### இந்தியா என்ன செய்யலாம்?

"ஷி யாங் 6" கப்பலின் வருகை மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதால் ஏற்படும் சவாலை எதிர்கொள்ள இந்தியா பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கும். முதலாவதாக, இந்தியா தனது சொந்த இராணுவ திறன்களில் தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டும். இந்த பிராந்தியத்தில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# வடக்கு மீனவர்கள் பிரச்சினையில் தமிழ் தலைவர்கள் ஏன் மௌனம்?

## மீனவர் சமாஜ செயலாளர் ஆலம் செவ்வி



**போர் முடிவுக்கு வந்து பதின்னான்கு வருடங்கள் சென்றுள்ள நிலையிலும், வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர் கதையாகவே உள்ளன. இந்திய மீனவர்களின் அத்துமீறல், சிங்கள மீனவர்களின் ஊடுருவல், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன் படுத்துதல், கடலட்டைப் பண்ணைகள் என்பன வட பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப் பனவாக உள்ளன. இந்த நிலையில், அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க சமாஜ செயலாளர் என்.எம்.ஆலம் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்க ளின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

**இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் வடபகுதி தமிழ் மீனவர்கள் கடுமையான நெருக்கடிகளை சந்தித்துவருகின்றனர். பல ஆயிரம் குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளன எனக் கூறப்படுகின்றது. உண் மையில் அங்குள்ள நிலை என்ன?**

குறிப்பாக இந்தியா மீனவர்கள் பிரச்சனை சார்ந்து பேசுவோமானால் இது ஒரு நீண்ட காலப் பிரச்சனை. யுத்தம் முடிவடையும் இறுதிக் காலம் மற்றும் அதன் பின் என நீண்ட காலமாக இந்த பிரச்சனை காணப்படுகின்றது.

இந்திய மீனவர்களது வருகை என்பது இலங்கை கரையோரம் வரை அவர்களது சட்ட விரோத வலைகளை கொண்டு மீன் பிடிப்பது ஒரு சட்டவிரோத செயலாகும். அவர்கள் இலங்கையில் உள்ள படகுகளை விட அதிக பெரியளவில் உள்ள படகுகளை கொண்டு இலங்கையில் தடை செய்யப்பட்ட இளுவை வலைகளின் ஊடாக இலங்கை கடல் வளத்தை முற்று முழுதாக சட்ட விரோதமான வலைகளால் அழித்து வருகின்றனர்.

இருபது வருடங்களுக்கு முன்பாக இருந்து இவர்களது அத்துமீறல் தொடர்கின்றது. இவர்களது வருகை வாரத்தில் இரண்டு முறை காணப்பட்டது. இப்போது வாரத்தில் ஐந்து நாட்கள் வருகின்றனர். நாங்கள் இதனை கண்டித்து தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் தீர்வு எட்டப்படவில்லை.

இந்திய இலங்கை மீனவர்கள் அமைப்பின் உறுப்பினர்கள் ஊடாக பலதடவை பேசப்பட்டது. அதன் பிறகு இந்திய தூதரகம் சென்று பாராளுமன்ற உறுப்பினர்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள் என 2016 ஆம் ஆண்டு பேசி சில முடிவுகள் எடுக் கப்பட்டது. இழுவைப் படகு மீன் பிடி முறை இலங்கை கடற்பரப்பில் நிறுத்தப்பட வேண்டும். இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழையக்கூடாது என்று முடிவுகள் எடுக்கப்பட்டது. அதனை கண்காணிக்க ஒரு குழு அமைப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் இதுவரையிலும் ஒரு முடி வும் எடுக்கப்படவில்லை.

இந்திய மீனவர்களது வருகை என்பது தங்களது ஒரு மாநிலமாக வடபகுதியை கருது கிறார்களா என எண்ணம் எழுகிறது. தொடர்ச்சியாக இலங்கை அரசுடனும் இந்திய அரசுடனும் நாங்கள் பேசி எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. அவர்களது கருத்து பெரும்பான்மை சமூகமான சிங்களவர்கள் தடுக்கிறார்கள் (கடற்படை) என்பதே அவர்களது கருத்து. மாறாக இதில் தமிழ் மீனவ மக்கள் பாதிக்க படுகிறார்கள் என்பதனை அவர்கள் உணர மறுப்பதுதான் ஏன் என்று புரியவில்லை.

தற்போது உள்ள கடல் துறை அமைச்சர் கூட தடுப்பதற்கு ஏதாவது முடிவு எடுப்பார் என்று பார்த்தால் அவரும் அவ்வாறு செயல்படுவதாக இல்லை. குறிப்பாக சொல்வோமாக இருந்தால் இதற்கான விடையை எப்போது காணப்போகிறார் கள் என்பது புரியவில்லை. ஆனால் இந்திய தமிழக மீனவர்கள் இங்கு வாழ்பவர்கள் தமிழர்கள் அவர்களது கடல் தொழில் பாதிக்கப்படும் என்ற கருத்தை அவர்கள் மனதில் மேன்மையாக்கி கொள்வார்களாக இருந்தால் இதற்கான தீர்வை எட்ட முடியும்.

**இந்தப் பிரச்சினை தொடர்பில் இந்திய அரசுடனும், தமிழக மீனவர்களுடனும் பேசியுள்ளீர்கள். அந்தப் பேச்சுக்கள் வெற்றியளிக்காமைக்கு என்ன காரணம்?**

இரு மீனவர்களுக்கும் இடையில் பேச்சு வார்த்தை நடந்தது. ஆனால் இந்தியாவின் நிலைப் பாடு அவர்கள் மீன் பிடிப்பார்கள் என்பதாகவே உள்ளது. ஆனால் இதன் பின்னால் ஏதோ ஒரு விடையம் அல்லது ஒரு சத்தி செயல்படுவதாகவே எண்ண முடிகிறது.



**இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவிருப்பதாக பிரதமர் அண்மையில் தெரிவித்திருந்தமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

பிரதமர் கருத்தினை இலகுவாக எடுத்துவிட முடியாது. இது தொடர்பாக கடல்துறை அமைச் சரிடம் பேசினோம். அதற்கு அவர் கூறிய பதில் கடல்துறை சார்ந்த பிரச்சனைகள் தொடர்பில் முடிவு எடுப்பது நான் வேறு யாரும் இல்லை அப்படி யாராலும் அதனை செய்ய முடியாது என கூறியிருந்தார். பிரதமரின் கருத்து தொடர்பாக இலங்கை அமைச்சர் அவையில் பேசுவீர்களா என கேட்டோம் அதற்கு அமைச்சர் சரியான பதிலை தரவில்லை. ஆனால் அவர் ஒரு தமிழர் அதுவும் அவர் வடக்கு மாகாணத்தை சார்ந்தவர். இருந்தும் பெரும்பான்மை சமூகத்தின் கருத்தினை மீறி அமைச்சர் எந்த முடிவும் எடுக்க முடியாதவராக உள்ளார் என்பதை எங்களால் உணர முடிகிறது.

**தமிழ் நாட்டுக்கு சென்று தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு மீனவர்கள் முடிவு செய்துள் ளதாக ஒரு தகவல் வெளிவந்திருந்தது. அவ் வாறான திட்டம் ஒன்று உங்களிடம் உள்ளதா?**

எனக்கும் அவ்வாறு அழைப்பு விடுக்கப் பட்டது. ஆனால் அவ்வாறு சென்று பேசுவதில் எந்தவிதமான நன்மையும் இல்லை என்பது எனது கருத்து. ஏனெனில் அரச தரப்பு உயர் மட்ட குழுக்களிடம் இது தொடர்பாக பேசப்பட்டுள்ளது. அந்த பேச்சுவார்த்தையில் பிரதமராக இருந்தவர் ரணில் இப்போது ஜனாதிபதி. அப்போது அமைச்சராக சென்ற வீரசேகர இப்போது விவசாய அமைச்சராக உள்ளார். சுமந்திரன் அவர்கள் அதே நிலையில் உள்ளார். ஆகவே பேசியவர்கள் அதே நிலையில் உள்ளனர். ஆகவே அதனை மீண்டும் முன்னெடுத்தாலே போதுமானதாக இருக்கும். இன்னும் ஒரு பேச்சுவார்த்தை தேவை இல்லை.

தமிழகத்தில் உள்ள மீனவர்களுடன் எவ்வாறு பேசினாலும் அவை எடுபடாத விடயம். அப்படி பேச்சுவார்த்தை செய்வது என்பது ஒரு சுற்றுலா சென்று வருவதாகவே இருக்குமே தவிர ஒரு முடிவுக்கு வராது. ஆகவே முன்பு பேசிய விடையங்களை மீண்டும் முதன்மை படுத்தி அது தொடர்பில் பேசுவதானால் அது சாத்தியமாக இருக்கும்.

**மீனவர்களுடைய இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு என்ன?**

இங்கு உள்ள தமிழ் கட்சிகள் இந்தியாவுக்கு சாதகமாக செயல்படுகிறார்கள். குறிப்பாக தங்களுக்கு கூறப்படும் அரசியல் தீர்வை இந்திய அரசு ஊடாக பெறவேண்டும் என்பதால், அந்த அரசியல் தீர்வை நோக்கி நகர்கின்றார்களே தவிர இந்த மீனவர்களது துன்பத்தை பேசுவதாக இல்லை.

இடை இடையே மேலோட்டமாக பேசி னாலும் கூட அது முழுவீச்சில் செயற்படுவதாக தெரியவில்லை. குறிப்பாக நாங்கள் இந்திய மீனவர்களது சட்டவிரோத செயற்பாட்டிற்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தமிழர்கள் மீதான வன்முறைகளை தூண்டி அதிகாரத்தை கைப்பற்ற முயற்சி

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது மேய்ச்சல் தரையினைக்கோரிய போராட்டம் 43நாட்களையும் தாண்டிய வகையில் நடைபெற்றுவருகின்றது. தமது நிலத்தினை கோரிய இந்தபோராட்டம் என்பது தமிழர்களின் மிக துயரமிகுந்த போராட்டமாக பார்க்கப்படுகின்றது. தமது வாழ்வாதாரத்தினை இழந்து நிற்கும் ஒரு சமூகத்தின் போராட்டமாக காணப்படுகின்ற நிலையில் கிழக்கில் மேலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பது தமிழர்களை மீண்டும் இந்த நாட்டில் ஒரு இன அழிப்புக்குள் கொண்டு சென்றுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு நிற்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் பௌத்த பிக்குகளின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக மிக மோசமாக நடைபெற்றுவரும் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் அடாவடித்தனம் மீண்டும் அரங்கேற்றப்படும் நிலைமை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மயிலத்தமடு,மாதவனை பகுதியில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்கள் பண்ணையாளர்கள் நிலங்களை அபகரித்து அங்கு பயிர்ச்செய்துவரும் நிலையில் அதனை தடுத்து நிறுத்தி தமது காணிகளை மீளப்பெற்றுத்தருமாறும் தமது தொழிலை சுதந்திரமாக செய்ய அனுமதிக்குமாறு கோரியும் பண்ணையாளர்களின் போராட்டம் முடிவின்றிய நிலையிலேயே தொடர்ந்துவருகின்றது.



பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பில் இன்று கொழும்பு அரசியலிலும் தமிழர் அரசியலிலும் மாற்றம்பெற்றுவரும் நிலையில் அவற்றினை திசைதிருப்பி தமது ஆக்கிரமிப்பு செய்யற்பாடுகளை செய்யவதற்காக இந்த செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுவருவதை காணமுடிகின்றது. குறிப்பாக மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு செயற்பாட்டினையும் அதற்கு எதிரான குரல்களையும் தென்னிலங்கையில் சிங்கள மக்களுக்கு எதிரான செயற்பாடுகளாக சித்தரிக்கு வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதை காணமுடிகின்றது. இந்த போக்குகள் என்பது எதிர்காலத்தில் தமிழர்கள் மீதான வன்முறைகளை தூண்டுவதற்கான செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரங்களை தக்கவைப்பதற்காகவும் ஆட்சி அதிகாரங்களை பிடிப்பதற்காகவும் தமிழர்கள் பலிகடாவாக்கப்பட்டார்கள். இன்றும் அதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.

1983ஆம் ஆண்டு கலவரம்,1990ஆம் ஆண்டு கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட படுகொலைகள் அனைத்தும் இந்த நோக்கங்களுக்காகவே மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதியில் பௌத்த மேலாதிக்கம் மற்றும் முஸ்லிம் பாசிசவாதம் ஆகியவற்றினை பயன்படுத்தியே தமிழர்கள் மீது தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்கள் மீது தாக்குதல் முன்னெடுப்பதற்காக சிங்கள பௌத்த கடும்போக்காளர்கள், முஸ்லிம் கடும்போக்காளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு அன்றைய அரசுகள் தொடர்ச்சியான உதவிகளை வழங்கி வந்தார்கள். அவ்வாறான குழுக்கள் என்பது தொடர்ச்சியாக மாறிமாறிவரும் ஆட்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றியே வந்துள்ளது.

இவற்றின்மூலம் கிழக்கில் தமிழர்கள் படுகொலைகள் செய்வதற்கும் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதற்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு அவை வெற்றியும் பெற்றன. இந்த செயற்பாடுகள் என்பது கிழக்கில் அம்பறை மாவட்டம், திருகோணமலை மாவட்டங்கள் சிறந்தமுறையில் செயற்படுத்தப்பட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையாக தமிழர்கள் இருந்த காரணத்தினால் ஓரளவே வெற்றிபெற்றது.எனினும் எல்லைப்பகுதிகளில் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு அது ஏதுவான நிலைமையினை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே இன்று கிழக்கில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இன்று கிழக்கில் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் போன்றவர்கள் நேரடியாக களமிக்கப்பட்டுள்ளார்கள். திருகோணமலையில் திலீபனின் நினைவுத்தூபி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தாக்கப்பட்டது தொடக்கம் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் என்பது பெரும் அச்ச நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று மற்றும்கிரான்பிரதேசசெயலாளர்பிரிவுகளின் எல்லைப்பகுதியாக மயிலத்தமடு,மாதவனை பகுதி காணப்படுகின்றது. அப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக மூவினங்களையும் சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை வளர்த்துவருகின்றனர்.மட்டக்களப்பு மாவட்டத்தினை பொறுத்த வரையில் அதிகளவான விவசாயம் செய்யும் மாவட்டம் என்ற காரணத்தினால் விவசாய செய்கை காலத்தில் மாடுகள் முழுவதுமாக மேய்ச்சல் தரைக்கு கொண்டுசெல்லப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே அப்பகுதியில் உள்ள மேய்ச்சல் தரை காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகள் 2010ஆம் ஆண்டு தொடக்கம் முன்னெடுக்கப்படுகின்றது. அங்கு அத்துமீறிய குடியேற்றத்திற்காக அமைக்கப்பட்ட புத்த விகாரைகள் கூட நீதிமன்ற உத்தரவிற்கமைய அகற்றப்பட்டு அப்பகுதி மேய்ச்சல் தரைக்காக பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் அப்பகுதியில் அத்துமீறிய குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 2021 கொழும்பு உச்ச நீதிமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் தொடரப்பட்ட வழக்கின் அடிப்படையில் அங்கிருந்து அத்துமீறிய குடியேற்றவாசிகள் வெளியேறும் நிலையேற்பட்டது.

எனினும் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் பதவியேற்றதன் பின்னர் அத்துமீறிய குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.அவர் என்ன நோக்கத்திற்காக கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டாரோ அந்த நோக்கத்தினை அடைவதற்கான செயற்பாடுகளை அவர் கச்சிதமாக முன்னெடுத்தார். மட்டக்களப்பு நகரில் மற்றும் கல்குடா பகுதிகளில் சிங்கள பாடசாலைகளை ஆரம்பித்த அவர் கல்குடா மற்றும் ஏறாவூர் பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றும் மிக திட்டமிட்டு முன்னெடுத்தார். இதுபோன்று பல செயற்பாடுகளை கிழக்கிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலும் முன்னெடுத்தார்.



இவ்வாறான நிலையிலேயே கிழக்கில் மயிலத்தமடு,மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்படும் செயற்பாட்டினை யாரும் ஒரு சிறிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ளமுடியாது. இது மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் பாரிய பிரச்சினையாகும். அதன் காரணமாகவே இன்று மயிலத்தமடு,மாதவனை பிரச்சினையை சிங்களவர்களுக்கு ஏதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடாக இன்று தென்னிலங்கைக்கு கொண்டுசெல்லப்படுகின்றது. அதற்கான பணியை அம்பிட்டிய சுமனரத்ன தேரர்,சரத் வீரசேகர, அனுராதா ஜகம்பத் போன்றவர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.

தற்போது மயிலத்தமடு,மாதவனை பிரச்சினையை திவிலபொத்தானையில் சிங்களவர்களை தமிழர்கள் விரட்டுவதாக தெரிவித்து தென்னிலங்கையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மயிலத்தமடு, மாதவனை எல்லை என்பது போன்று அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் பகுதியாக காணப்படுவதே திவிலபொத்தானை பகுதியாகும். அங்கு புத்தர் சிலையினை நிறுவுவதற்கும் சிங்கள விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தமிழர்கள் தடைவிதிப்பதாக தென்பகுதியில் தொடர்ச்சியான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றிற்கு எதிரியாகதமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும் இணைத்து இந்த பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. இன்று கிழக்கில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை சிங்கள மொழியின் மூலம் தென்னிலங்கை மக்களுக்கு கொண்டு செல்லப்படும் செயற்பாட்டை சாணக்கியன் முன்னெடுத்துவருவதன் காரணமாக அவரை தென்னிலங்கையில் சிங்கள எதிர்ப்பாளராக காட்டி அவர் கூறும் விடயங்களை சிங்கள மக்களுக்கு எதிரானதாக காட்டும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

அதேபோன்று கிழக்கில் சிங்களவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றதாக காட்டி தெற்கில் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குமான செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

# International Crimes

## பகுதி 06

இனப்படுகொலையானது ஒரு படிமுறை வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என்பதை நாம் பாகம் ஐந்தில் பேசியிருந்தோம். இனப்படுகொலையின் படிமுறை வளர்ச்சியை அமெரிக்க இராசாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய தனது ஆய்வில் ஜெனோசைட் வோச் என்ற அமைப்பின் தலைவர் கலாநிதி. கிறகோரி எச். ஸ்டான்டன் வரையறுத்திருந்தார்.



அம்முதலாவது வரையறுப்பின் படி இனப்படுகொலையானது எட்டு படிமுறைகளைக் கொண்டிருக்கும் என்றுஅவர்கண்டுபிடித்திருந்தார். அவையாவன:

**1. வகைப்படுத்துதல்**

இனமொன்றை அல்லது இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்களை, யாதாயினும் பொதுஅடையாளத்தின் கீழ் ஒன்றுதிரட்டிக்கொள்ளுதல் வகைப்படுத்தலாக அமைகின்றது. உலகில் காணப்படும் பல்வேறுபட்ட கலாசாரங்களின் கீழ் வாழுபவர்கள் தாம் சார்ந்த கலாசாரத்தின் பால் இயற்கையாகவே தனியாக வகைப்படுத்தப்படுவதற்கு உரியவர்களாகவே இருப்பதை இங்கு அவதானிக்கலாம்.

**2. குறியிடல்**

வகைப்படுத்தப்படும் குழுவைப் பொதுப் பெயர் அல்லது சின்னமொன்றால் அடையாளப் படுத்த முடியுமாயின் அதனை குறியிடல் எனலாம்.

**3. மனித மாண்பை மறுத்தல்**

குறியிடப்பட்ட மனித தொகுதியொன்றின் மனித மாண்பினை புறந்தள்ளி அம்மனிதத் தொகுதியை மிருகங்களுக்கு, விலங்குகளுக்கு, உண்ணிகளுக்கு அல்லது நோய்களுக்கு சமப்படுத்த முனைவது மனித மாண்பை மறுத்தலாகும்.

இவ்வாறு மாண்பை மறுக்கும் உணர்வூட்டத்தினால் மற்றொரு இனம் இம்மிருகங்களிலிருந்து தப்பிக் கொள்வதற்கான உபாயமாக மாண்பு மறுக்கப்பட்ட இனத்தை படுகொலை செய்வதே சரியானது என்ற எண்ணப்பாட்டை ஊக்குவித்தலும் இதனுள் அடங்கும்.

**படுகொலைக்கான சரியான நேரம் வரும் பொழுது இனத்துவேச பிரசாரங்கள் முன்னெடுக்கப்படும்.**

**4. ஒழுங்குபடுத்தல்**



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள் பொத்தக ஆசிரியர்,
பட்டய முகாமைக் கணக்காளர்

இனப்படுகொலையானது எப்போதுமே ஒழுங்குபடுத்தப் பட்டதாகவே இருக்கும். ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையின் போது வளங்களைத் திரட்டி இனப்படுகொலைக்கென அவற்றைத் தயார்ப்படுத்துதல் நிகழும்.



அரசுகளே இவ்வொழுங்குபடுத்தும் நடவடிக்கைகளைப் பெரும்பாலும் முன்னெடுக்கின்றன. இனப்படுகொலைக்கு தேவையான மிக முக்கிய வளங்களான ஆயுததாரிகளைப் பயிற்சியளித்து, பாதுகாத்து அவர்களை தயார்ப்படுத்தும் அரசுகள் தாம் அப்பணியை செய்வதில்லை என்ற மாயையை உருவாக்குவதற்காக மேலும் பல வகையான அணிகளை பயிற்சி கொடுத்து தயாராக்கி வைத்திருக்கும்.

அத்துடன் முறைசாரா முறையிலும் உருவாக்கப்படும் ஆயுததாரிகள் பரவலாக்கப்பட்ட அதிகார வரம்புகளுடன் செயற்படவும் அனுமதிக்கப்பட்டிருப்பர். அத்துடன் பலவிதமான விசேட இராணுவ அணிகளும், ஒட்டுக் குழுக்களும் இனப்படுகொலைகளை நிகழ்த்த ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்.

**5. பிரித்து எதிரியாக்குதல்**

ஒற்றுமைப்பட்டிருப்பவர்களை பிரித்து கூறுகளாக்கி அவர்களை தம்மிடையே எதிரிகளாக உருவாக்கும் நடவடிக்கை அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படும். ஒற்றுமையைக் குலைக்கும் விதமாக வெறுப்பையுமிழும் குழுக்கள் தமது வெறுப்புப் பிரசாரங்களை மேற்கொள்ளத் தொடங்கும்.

சட்டங்கள் சிலவேளைகளில் சமூக ஒன்றுகூடலை தடை செய்வதுடன் கலப்புத்திருமணங்களையும் தடைசெய்யும். இனப்படுகொலை அணிகள் தம்முடனுள்ள மிதவாதிகளை குறிவைத்து அவர்களது குரல்களை அடக்க முயற்சி செய்வர். ஏனெனில் தமது அணியில் உள்ள மிதவாதிகள் ஒருபோதும் இனப்படுகொலை திட்டத்தை அனுமதிக்க மாட்டார்கள் என்பதை தெரிந்துகொள்ளும் தீவிரவாதம் தமது பக்கத்திலுள்ள மிதவாதிகளை கைது செய்யவும் கொலை செய்யவும் தொடங்கும்.

**6. தயாராகுதல்**

இனப்படுகொலைக்கு உள்ளாக வேண்டியவர்கள் தாம் பின்பற்றும் தனித்துவ கலாசாரத்தினாலோ அல்லது இனத்துவத்தினாலோ அல் லது மதத்தினாலோ பிரித்து அடையாளப்படுத்தப்படுவர்.



இனப்படுகொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியல் தயாராக்கப்படும். அவர்களைப் அடையாளப்படுத்தக்கூடிய குறிகளை எவ் வேளையிலும் கொண்டிருக்குமாறு அவர்கள் கட்டளையிடப்பட்டிருப்பர்.

அவர்களது வளங்களைச் சூறையாடிக் கொண்டு தமது பகுதிக்குள் கொண்டு வருதல் அல்லது அவர்களைத் தனியாகப் பிரித்து ஒரு குறித்த முகாமுக்கு கொண்டு செல்லல் அல்லது அவர்கள் வாழும் பிராந்தியத்தை பஞ்சம் பீடிக்கக் கூடிய பிராந்தியமாக்கி அவர்களைப் பட்டினிச் சாவடையச் செய்யும் முயற்சிகளைத் தந்திரோபாயமாக மேற்கொள்ளல் என நடவடிக்கைகள் தொடரும். இவ்வகை நடவடிக்கைகளின் ஊடாக இனப்படுகொலையின் இறுதிக் கட்டத்தை நோக்கி நகர்த்துதல் தயார்ப்படுத்தல் படிநிலை எனலாம்.

**7. நிர்மூலமாக்குதல்**

இனப்படுகொலையின் இறுதிக்கட்டத்திற்குள் தள்ளப்பட்டுள்ளவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையாக பெருமெடுப்பில் மிக வேகமாக கூட்டுக்கொலைகள் நடைபெறத் தொடங்கும். இந்நிலை நிர்மூலம் செய்யும் நிலையெனவும், இச்செயற்பாடே இனப்படுகொலை என்றும் கொள்ளப்படும்.

"இனப்படுகொலைக்குள்ளாகுபவர்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# புறந்தள்ளப்படும் இளைஞர்கள்

துரைசாமி நடராஜா

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்களின் வகிபாகம் அதிகமாகும். இதனை கருத்தில் கொண்டு இளைஞர்களுக்கு உரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கி அவர்களை வளர்த்தெடுப்பது மிகவும் இன்றியமையாததாகும். இந்நிலையில் மலையக இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தேசிய நீரோட்டத்தில் உரியவாறு இணைத்துக் கொள்ளப்படவில்லை என்றும் அவர்களின் கனவுகள் மழுங்கடிக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையிலேயே அவர்கள் இன்னமும் இருந்து வருவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதன் நம்பகத்தன்மையும் பலராலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மலையக இளைஞர்களுக்கான வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட்டு சமூகத்திற்கும் நாட்டிற்கும் தோள்கொடுக்கக் கூடியவர்களாக அவர்கள் உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.



இளைஞர் சமூகம் ஒரு நாட்டின் மிகப்பெரும் சக்தியாகும். உழைக்கும் படை என்ற வகையில் இவர்கள் ஆதிக்கம் கையோங்கும் பட்சத்தில் நாடு பல்வேறு வழிகளிலும் முன்செல்லும் நிலைமை ஏற்படும். உலக வரலாறுகளை இளைஞர்கள் மாற்றியமைத்திருக்கின்றார்கள். உலகத் தலைவர்கள் பலர் அரசியலில் கோலோச்சுவதற்கு இளைஞர்கள் உந்துசக்தியாக இருந்திருக்கின்றார்கள். இந்த வகையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றியிலும் இளைஞர்களின் பங்களிப்பு கணிசமாக இருந்ததாக செய்திகள் வலியுறுத்துகின்றன.

இளைஞர்கள் சமூகத்தின் அச்சாணிகள் என்ற வகையில் அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து அவர்களை முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து இளைஞர்களை புறந்தள்ளிச் செயற்பட எவரும் நினைப்பார்களேயானால் அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் அதிகமாகும் என்பதையும் மறுப்பதற்கில்லை. இளைஞர் சக்தியை புறக்கணித்ததன் விளைவாக உலகநாடுகள் எதிர்கொண்ட சவால்கள் அதிகமாகும். இலங்கையும் இதற்கு விதிவிலக்காகிவிட வில்லை என்பதும் தெரிந்ததேயாகும்.

கடந்த காலத்தில் இலங்கையின் காலி முகத்திடலை மையப்படுத்தி இடம்பெற்ற இளைஞர் போராட்டம் நாட்டின் தலைமையையே ஆட்டம் காண வைத்ததும் நீங்கள் அறிந்ததேயாகும். தீர்மானம் மேற்கொள்ளும் பல இடங்களில் இளைஞர்கள் உரியவாறு உள்ளீர்க்கப்படவில்லை.



இத்தகைய இடங்களில் இளைஞர் தொடர்பான தீர்மானங்களை முதியவர்களே மேற்கொள்வதாகவும் இதனால் பாதக விளைவுகள் பலவும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நிகழ்வுகளினால் இளைஞர் அதிருப்தி நிலை மேலும் அதிகரித்து காணப்படுவதாகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

### நான்காண்டு திட்டம்

இளைஞர் அபிவிருத்தி கருதி கடந்தகாலங்களில் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும் கவர்ச்சியான வாக்குறுதிகள் பலவும் முன்வைக்கப்பட்டன. இதனிடையே தேசிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதி தேர்தலில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இளைஞர் மற்றும் சமூக முன்னேற்றம் கருதி காத்திரமான விடயங்கள் சிலவற்றை முன்வைத்திருந்தது.

இளைஞர்களின் சர்வதேச மொழி மற்றும் தகவல் தொழிநுட்பத்தை மேம்படுத்த இரவுப் பள்ளிகள் நிறுவப்படும். கல்விச் செயல்முறையை பூரணப்படுத்தாத இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கு நான்காண்டு திட்டம் தயாரிக்கப்படும். சுயதொழில் திட்டங்களில் இளம் தொழில் முனைவோருக்கு வழிகாட்டலையும் ஆதரவையும் வழங்குவதற்கு ஒரு தனி இளைஞர் வங்கி உருவாக்கப்படும். கல்வியை மேம்படுத்த ஐந்தாண்டு டிஜிட்டல் கல்வித் திட்டங்கள் முன்வைக்கப்படும்.

அனைத்து துறைகளிலும் இளம் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பதற்காக திட்டமொன்று வகுக்கப்படும் என்று பல்வேறு விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு பல திட்டங்கள் இளைஞர் அபிவிருத்தி கருதி முன்வைக்கப்பட்டபோதும் தேர்தல் தோல்வி உள்ளிட்ட பல காரணங்களால் இளைஞர்களை அந்த நன்மைகள் சென்றடையவில்லை என்பதும் குறிக்கத்தக்கதாகும்.

நாட்டின் இளைஞர்கள் தொடர்பாக நாம் பேசுகின்ற போது மலையக இளைஞர்கள் தொடர்பாக நாம் அதிகமாகவே பேசவேண்டிய தேவையுள்ளது. இவர்களின் அபிவிருத்தி தொடர்பில் வாக்குறுதிகள் பலவும் அவ்வப்போது வழங்கப்பட்டு வரும் நிலையில் அவை பெரும்பாலும் ஏட்டளவிலேயே முற்றுப்பெற்று விடுகின்றமை வருந்தத்தக்கதாகும். இளைஞர் தொழில் வாய்ப்புகளும் காத்திரமானதாக இல்லை. இதேவேளை *1977* ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் தொழில் வாய்ப்புகள் பலவும் நகர்ப்புறங்களில் ஏற்படுத்தப்படுவதற்கு அது காரணமாகியது.



இத்தகைய தொழில் வாய்ப்புகளினால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் தொழில் திறன் விருத்தி இல்லாத மற்றும் குறைந்த கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்த நிலையில் கீழ்மட்டத் தொழில்களையே மேற்கொள்ள வேண்டிய நிலை உருவானது. இதன் காரணமாக தொழில்திறனற்ற இளைஞர்களின் தொழிற்திறன் மேம்பாடு கருதி தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை மலையகத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோஷங்கள் வலுப்பெற்று வருகின்றன. பெரும்பாலான மாணவர்கள் குறைந்த தகைமையுடன் க.பொ.த.சாதாரண தர மற்றும் உயர்தரத்தின் பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

இன்னும் சிலர் இடைநிலை வகுப்புகளில் இடைவிலகுகின்றனர். இவர்களின் நலன் கருதி தொழிற்பயிற்சிகளை வழங்க வேண்டிய தேவை காணப்படுவதால் தொழிற்பயிற்சி நிலையங்கள் மலையகத்தில் அதிகரிக்கப்படுதல் வேண்டும். இதனிடையே சமகாலத்தில் இளைஞர்கள் கல்வி மேம்பாட்டின் ஊடாக அரசதுறை தொழில் வாய்ப்புக்கள் சிலவற்றை பெற்றுக் கொண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

இதேவேளை முன்னைய காலங்களில் பெருந்தோட்டத் துறையில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு தோட்டப்புற இளைஞர்கள் அதிகமாக உள்ளீர்க்கப்பட்டனர். எனினும் தற்போது அந்த நிலைமாறி பெரும்பான்மையினரின் ஊடுருவல் தோட்டப்புற தொழில் நிலைகளில் அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் இளைஞர்களின் அதிருப்தி இரட்டிப்பாகியுள்ளது.

பெருந்தோட்டத் தேயிலைத் தொழிற்துறை இன்று சவால்கள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வருகின்றது. இத்தொழிற்றுறையின் அதிகரித்த நெருக்கீடுகள், ஊதியப் பற்றாக்குறை மற்றும் நவீன தொழில்நுட்ப கையாளுகை இல்லாமை எனப்பலவும் இளைஞர்கள் இத்தொழிற்றுறையில் நாட்டம் கொள்வதற்கு தடையாக உள்ளன. இதன் காரணமாகவும் மலையக இளைஞர்கள் மாற்றுத் தொழிற்றுறையை நாடிச் செல்கின்றனர். கல்வி ஈடுபாடு மற்றும் வளர்ச்சி நிலை என்பனவும் மாற்றுத்தொழில்களை இளைஞர்கள் நாடிச்செல்வதற்கு பிறிதொரு காரணமாகும்.

மலையக அரசியல்வாதிகள் மலையக இளைஞர்களின் நலன் கருதி காத்திரமான வேலைத்திட்டங்கள் பலவற்றையும் முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்படு கின்றது. என்றபோதும் அவர்களின் செயலாற்றுகை தொடர்பில் திருப்திகொள்ள முடியாத ஒரு நிலையே இருந்து வருவதாகவும் கருத்துகள் ஓங்கி ஒலிக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு மலையக அரசியல்வாதிகளும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு இளைஞர் அபிவிருத்திக்கு வலுச்சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமும் அவசரமுமாகும்.

### மனிதவள அபிவிருத்தி தேவை

இதேவேளை தோட்டப்புற இளைஞர்களின் மனிதவள அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யவேண்டியதன் அவசியத்தை பேராசிரியர் மு.சின்னத்தம்பி தனது கட்டுரையொன்றில் வலியுறுத்தியுள்ளார். மேலும் தோட்ட இளைஞர்களின் மனிதவளத் தேவைகளை இனம் காணும்போது இளைஞர்களின் அபிலாஷைகளுக்கு மட்டுமல்லாது தோட்டங்களின் தேவைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தும் பேராசிரியர் இவ்வாறான மனிதவள அபிவிருத்தி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இந்தியப் படையின் குற்றங்கள் விசாரணைக்கு உரியவை!

இந்தியா தன்னுடைய சொந்த முகத்திலேயே கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கொண்ட துர்ப்பாக்கிய நிகழ்வுகள் பல! அவற்றில் ஒன்று தான் 1987 அக்டோபரில் யாழ் பொது மருத்துவமனை மீது இந்திய அமைதி காப்புப் படை நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல். அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட மருத்துவமனை பணியாளர்களும், பொதுமக்களும், அறிவொன்றைத் தவிர வேறெந்த ஆயுதத்தையும் அறியாதவர்கள்.



கொல்லப்பட்டவர்களில் 3 மருத்துவர்கள் உட்பட 21 பேர் மருத்துவமனையில் பணிபுரிந்தோர். 47 பேர் அப்பாவி நோயாளிகள். அவர்களைக் கொன்றது இந்திய ராணுவம் என்று சொல்வது, வெளிப்பார்வைக்கு சரியாக இருக்கலாம். இந்தியா மீதான கண்மூடித்தனமான நம்பிக்கைதான் அவர்களைக் கொன்றது. இதுதான் நிஜம்.

மற்றெல்லா ஈழத் தமிழ் உறவுகளையும் போலவே, அவர்களும் இந்தியா எங்கள் நண்பன் என்றுதான் நம்பினார்கள். அதற்குக் கொடுத்த விலைதான், அந்த 68 உயிர்கள். 68 என்கிற இந்த உயிர்த்தொகை கூட சரியானதா என்று தெரியவில்லை இன்றுவரை! அக்டோபர் 21 மாலையிலிருந்து மறுநாள் காலை வரை நடத்தப்பட்ட ஈவிரக்கமற்ற அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை மருத்துவ மனை பிணவறை அருகே குவித்து, ஒட்டு மொத்தமாக தகனம் செய்திருக்கிறது இந்தியப் படை. இது அரக்கத்தனத்தின் உச்சம். ஒட்டுமொத்தமாக எரித்துச் சாம்பலாக்கிய பிறகு, அஸ்தியை வைத்து உயிர்களை எண்ணியிருக்க முடியுமா?

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளர்களின் எண்ணிக்கையைச் சரிபார்ப்பது சாத்தியமில்லை. படுக்கைகளில் மட்டுமின்றி, மருத்துவமனையின் தரைகளில் கூட பாயோ துணியோ விரித்து சிகிச்சை பெற்ற அப்பாவிகள் பலர். அவர்களது கதி என்னவென்பது இந்திய அமைதிப் படைக்கே வெளிச்சம்.



செப்டம்பர் இறுதி வாரத்தில் திலீபன் உயிர் துறக்கிறான். அந்த அரிதினும் அரிதான உயிரைக் காப்பாற்ற இந்தியா ஒரு துரும்பைக் கூடத் தூக்கிவைக்கவில்லை. தன்னுடைய போக்கிரித்தனத்தாலும் பொறுப்பின்மையாலுமே அவனைக் கொல்கிறது. அக்டோபர் தொடக்கத்திலேயே புலேந்திரன், குமரப்பா உள்ளிட்டோரின் வீர மரணம். அதற்கும், இந்தியாவின் பொறுப்பின்மையும் ஆணவமுமே காரணமாகிறது. இந்தியாவின் இந்த நம்பிக்கைத் துரோகத்தைத் தொடர்ந்து அவதானித்தபிறகுதான், 'இந்தியா நமது நண்பன்' என்று நம்பிக்கையோடு அறிவித்துவிட்டு



இயக்குனர்
புகழேந்தி தங்கராஜ்

இரண்டு மாதங்களாக ஆயுதங்களைக் களைந்து நிராயுதபாணியாகவே வலம்வந்த பிரபாகரன், மீண்டும் ஆயுதம் தரிக்க வேண்டியிருந்தது. அது 'வீழ்வோமென்று நினைத்தாயோ' என்கிற நெஞ்சுரத்தோடு, இந்தியா என்கிற பிராந்திய வல்லரசுக்கு ஓர் விடுதலை இயக்கம் விடுத்த வெளிப்படையான அறைகூவல்.



எண்ணிக்கையில் தங்களைக் காட்டிலும் இந்தியப்படையின் பலம் பலமடங்கு அதிகமென்பதை விடுதலைப் புலிகள் அறிந்தே இருந்தனர். அதன் ஆயுதபலம் குறித்து அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், குட்டக் குட்டக் குனிந்துகொண்டிருப்பது கோழைத்தனம் என்கிற தன்மான உணர்வு அவர்களை மீண்டும் களத்துக்குத் தள்ளியது. அவர்கள் ஒருபோதும் வன்முறையை நேசித்தவர்களல்ல! அதேசமயம் தங்கள் மக்கள் மீதான வன்முறையைத் தடுக்கலாமா வேண்டாமா என்று 'டாஸ்' போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுமல்ல! கண்ணெதிரில், மருத்துவமனை போன்ற பொது இடங்களில் கூட, தம் உறவுகள் சிந்திய ரத்தத்தைப் பார்த்தபிறகு புலிகளின் ஆயுதங்கள் மீண்டும் பேசத் தொடங்கின. உலகெங்கும் நிஜமான விடுதலைப் போராட்ட வீரர்கள் இப்படித்தான் இருந்தனர். எதிரி பலம் வாய்ந்தவன், அவனது ஆயுத பலம் அபரிமிதமானது – என்றெல்லாம் அவர்கள் யோசித்ததில்லை. எதிரியின் மனபலத்தைக் காட்டிலும் தங்களது மனபலம் எத்துணை வலிமை வாய்ந்தது என்பதை அறிந்து அச்சமின்றி களத்தில் குதித்தார்கள் அவர்கள். எதிரியின் பலம் நிர்மூலமாக்கப்பட்டது. இதுதான் வரலாறு. இந்த வரலாறுதான் ஈழத்திலும் நடந்தது. அமைதிப் படை என்பது இந்தியா நீட்டிய உதவிக்கரம் என்கிற நம்பிக்கை தகர்ந்து,



அது ஒரு உபத்திரவம் என்கிற யதார்த்தத்தை உணர்த்திய பல நிகழ்வுகளில் யாழ் பொது மருத்துவமனை தாக்குதலும் ஒன்று. முதல்நாள் மாலை தொடங்கிய கொலைவெறித் தாக்குதல் மறுநாள் வரை தொடர்கிறது. மறுநாள் காலையில், மருத்துவருக்கான சீருடையுடன், இரண்டு தாதிகளுடன் கையை உயர்த்தியபடி இந்தியப் படையிடம் நீதி கேட்க நெருங்கிய டாக்டர் சிவபாதசுந்தரத்தை ராணுவக் கோழைகளின் துப்பாக்கித் தோட்டாக்கள் துளைத்து வீழ்த்தியது, சர்வநிச்சயமாக மானுட விரோத நடவடிக்கை.



கொல்லப்பட்ட மருத்துவமனை பணியாளர்கள் எண்ணிக்கை வேண்டுமானால் ஓரளவு சரியானதாக இருக்கலாம். ஆனால், யாழ் குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இஸ்ரேல் - காஸாப் போரைப் பதிவுசெய்வதில் மேற்குலக ஊடகங்களின் பாரபட்ச அணுகுமுறை

தமிழில்: ஜெயந்திரன்

காஸாவில் மீண்டும் ஒரு போர் தொடங்கி, ஏற்கனவே இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன. இஸ்ரேல் படைகள் இடைவிடாது மேற்கொண்டுவரும் மிகக் கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் காரணமாக 7000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இறந்திருக்கிறார்கள். அதே நேரம், தென் இஸ்ரேலில் ஆயுதம் தாங்கிய பாலஸ்தீன எதிர்ப்புக்குழு மேற் கொண்ட தாக்குதல்களில் 1400 இஸ்ரேலியர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.



நடந்துகொண்டிருக்கும் போர் தொடர்பாக மேற்குலக ஊடகங்கள் வெளியிட்டுவருகின்ற செய்திகளை அவதானிக்கும் போது, இருதரப்பிலும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படும் விடயம் மாறுபாடான விதங்களில் அணுகப்படுவதை என்னால் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஹமாசினால் இஸ்ரேல் மக்கள் குரூரமாகக் கொல்லப்பட்டதில் எல்லா அறநெறிக் கோட்பாடுகளையும் ஹமாஸ் போராளிகள் மீறிய தாகச் சுட்டிக்காட்டும் மேற்குலக ஊடகங்கள், சமகாலத்தில், காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேல் படைகள் மேற்கொண்டு வரும் ஈனஇரக்கமற்ற குண்டுத்தாக்குதல்களின் கோரத்தன்மையையும் அங்கே அறநெறிக்கோட்பாடுகள் மீறப்படுவதை யும் சுட்டிக்காட்ட மறுக்கின்றன.



அண்மையில் பிபிசியின் இரவுச் செய்தி நிகழ்ச்சி ஒன்றில், ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ளபாலஸ்தீனத்தூதரகத்தின்தலைமைப் பதவியை வகிக்கின்ற ஹ_சம் ஸொம்லொட் எவ்வாறு இஸ்ரேலிய குண்டுத்தாக்குதலில் தனது குடும்பத்தைச் சேர்ந்த ஏழு அங்கத்தவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை விவரித்தார். அந்த நேரத்தில் பெயருக்காக அநுதாபம் தெரிவித்த பிபிசி செய்தியாளர், "இஸ்ரேலில் அப்பாவிப்பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று உடனடியாகவே தெரிவித்தார்.

தூதரக அதிகாரியான ஸொம்லொட், ஹமாஸ் இழைத்த அட்டூழியங்களை நியாயப்ப டுத்துவதற்காக தனது இழப்பையும் துன்பத்தையும் எடுத்துச்சொல்லவில்லை. அதற்கு மாறாக அவரிடம் நேரடியாகக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும் போது தான் தனது தனிப்பட்ட அனுபவம் பற்றி எடுத்துச் சொன்னார். அவ்வாறு அவர் பதிலளித்த நேரத்தில் அவரது உறவினர்களைக் கொன்றவர்கள் மீது கண்டனம் தெரிவிக்காமல் ஏனையோரைக் கொன்றவர்களைக் கண்டனம் செய்யும் வண்ணம் அவர் கேட்கப்பட்டார்.

அதே நேரம் இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், தமது உறவுகளைத் தாக்குதல்களில் இழந்த இஸ்ரேல் மக்களுடன் செவ்விகள் மேற்கொள்ளப்பட்ட போது, அவர்களது அரசு மேற்கொள்ளும் செயற் பாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்றோ அல்லது, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோஆவ் கலன்ட், பாலஸ்தீனர்கள் 'மனித மிருகங்கள்' என்று விவரித்தது பற்றியோ எந்தவிதமான கேள்வியையும் எழுப்பியதை எந்தவொரு செவ்வியிலும் என்னால் பார்க்க முடியவில்லை.

இஸ்ரேலின் அணுகுமுறைக்கு முற்றிலும் எதிராக, அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் இனவழிப்பைப் பற்றியோ அல்லது காஸாவி லிருந்து அப்பாவிப்பொதுமக்கள் முற்றுமுழுதாக வெளியேற்றப்படுவது பற்றியோ எந்தவிதத்திலும் கண்டனம் தெரிவிக்கும் படி கேட்கப்படவில்லை.

மேற்குலகில் உள்ள அரசுகள் நிறுவனங் கள், மக்கள், ஊடகங்கள் அத்தனையுமே காலனீயம், வெள்ளை இனத்தவரின் மேலாதிக்கம், இஸ்லாமியர்கள் மீதான வெறுப்பு, போன்ற கண்ணாடிகள் ஊடாகவே உலகை உற்றுநோக்குகின்றன என்று த நியூ ஹியுமானிற் றேறியன் (The New Humanitarian) என்ற இதழின் ஆசிரிய தலையங்கம் சுட்டிக்காட்டுகிறது. ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரேன் மேற்கொண்டு வரும் எதிர்ப்பு யுத்தத்தைப் போற்றிப்புகழ்கின்ற மேற்குலகம், ஆக்கிரமிப்பு மற்றும் இனச்சுத்திகரிப்பு போன்ற தீமைகளுக்கு எதிராகப் போராடுகின்ற பாலஸ்தீனர்களின் எதிர்ப்புப் போராட்டங்களில் உள்ள நியாயத்தை ஏற்க மறுக்கின்றன.

எவ்வாறு இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையான மக்கள் ஒரு சிறிய நிலத்துண்டுக்குள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றோ அல்லது எவ்வாறு இப்பிரதேசத்தின் மேல் 16 வருடங்கள் நீடித்த பொருண்மியத் தடைகள் இப்பிரதேசத்தை ஒரு 'திறந்தவெளிச் சிறைச்சாலையாக' மாற்றியிருக்கின்றது என்பது பற்றியோ விவாதிக்க எந்த ஊடகங்களும் ஆயத்தமாக இல்லை.

'ஊடக நடுநிலைமை' என்ற விடயத் தைக் காரணங்காட்டி, காஸாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பாக ஊடகங்கள் மேற்கொள்ளும் பதிவுகள் அங்கு இருக்கின்ற உண்மையான நிலைமையைப் பதிவுசெய்யத் தவறுகின்றன. உண்மையைச் சொல்லப் போனால், ஊடக நடுநிலைமையை அடிப்படையாகக்கொண்டு எவ்வாறான செய்தி களைப் பதிவுசெய்யலாம் என்ற விடயம் எப்போதுமே தெளிவாக வரையறை செய்யப் படுவதில்லை. எவ்வாறான பண்பாட்டில், எவ்வாறான விழுமியங்களின் அடிப்படையில் அந்த ஊடகங்கள் இயங்குகின்றனவோ அந்த விடயங்களின் அடிப்படையிலே தான் ஊடக நடுநிலைமை வரையறை செய்யப்படுகிறது.

"ஒரு தேசத்தின் ஊடக அணுகுமுறை அந்த சமூகம் மேற்கொண்டிருக்கும் வரையறைகளை மீறிச் செல்ல முடியாது. அதே நேரம், அது பிற்போக்கானதாகவும் இருக்க முடியாது" என்று மறைந்த அமெரிக்க ஊடக அறநெறிக் கோட்பாட்டாளரான ஜோண் கால்~ஹ_ண் மெறில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவ்வாறான பாரபட்சங்களைப் விளங்கிக் கொள்வதற்கு ஊடகத்தின் மீது பண்பாடு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். இவ்வாறான விடயங்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை. காஸாவில் நடைபெறும் போரை ஊடகங்கள் பதிவுசெய்யும் முறையை அவதானிக் கும் போது, வெளிப்படையாகப் பேசப்படாத சமூக வரையறைகள் ஊடகத் தர்மத்தை எப்படிப் பாதிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளலாம்.




இங்கே ஒரு வித தணிக்கை நடைமுறையில் இருப்பதை நாங்கள் அவதானிக்கலாம். எந்த விதமான நிபந்தனையுமற்ற விதத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் நிலைப்பாட்டிலி ருந்து விலகிச்சென்று, பாலஸ்தீன மக்களை மனிதாயக் கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடிய கருத்துகள் வெளிவராது தடைசெய்யப் பட்டிருக்கின்றன. பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தக்கூடிய ஆர்ப்பாட்டங்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. பாலஸ்தீனக் கொடியைத் தாங்கிச்செல்பவர்கள் கைதுசெய்யப் படுவார்கள் என அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர். பாரிய தொழில்நுட்ப நிறுவனங்களால் இயக்கப்படும் ஊடகங்களில் பாலஸ்தீன மக் களுக்கு ஆதரவான கருத்துகள் நீக்கப்படுகின்றன.

இஸ்ரேல் மக்கள் மீது ஹமாஸ் போராளிகள் மேற்கொண்ட தாக்குதலின் உண்மையான பின்னணி என்ன என்பதை விவரிக்கும் செயற் பாடுகளைக் கைவிடுமாறு அமெரிக்க செய்திச் சேவைகளில் பணியாற்றும் செய்தி ஆசிரியர்கள் தூண்டுவதாகச் சொல்லப்படுகின்றது. அதற் கு க் காரணம் கேட்பவர்களுக்கு அதனை ஜீரணிப்பது கடினமானதாகவே இருக்கும் எனக் கருதப்படு கின்றது.

இது எவ்வாறு இருப்பினும், இங்கு தணிக்கை என்பது போதுமான விளக்கமாக இருக்காது. மெறில் சுட்டிக்காட்டியது போல, சமூகம் முற்போக்குப் பாதையில் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் ஊடகங்கள் பின்னே நிற்க முடியாது. ஊடகவியலாளர்களை வழிநடத்துகின்ற அறநெறிக்கோட்பாடுகள் மற்றும் விழுமியங்களைப் பார்க்கின்ற போது, இந்தக் கோட்பாடுகளும் விழுமியங்களும் தனியே ஊடகவியலாளர்களுக்கு மட்டும் சொந்த மானவை அல்ல. உண்மையில் சமூகம் ஊடகவியலாளர்களிடம் எதனை எதிர்பார்க் கின்றது என்பதையே அவை பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

ஒட்டுமொத்தத்தில், இஸ்ரேலைப் பற்றியும் காஸாவைப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஊடகப் பதிவுகள், அங்கே உண்மையில் நடைபெறும் நிகழ்வுகளைப் பிரதிபலிக்கவில்லை. அதற்கு மாறாக, அவை குறிப்பிட்ட ஊடகவி யலாளர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# எதிரியின் பலம் – பலவீனம் அறிந்து

## மத்திய கிழக்கில் திறக்கப்பட்டுள்ள களம்

வேல்ஸ் இல் இருந்து: அருஸ்

ஒக்ரோபர் மாதம் இறுதி வாரம் என்பது ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் ஒரே இரவில் யாழ்குடாநாட்டில் இடம்பெயர்ந்த துன்பமான நிகழ்வுகளை தாங்கி நிற்கும் மாதமாகும். சமாதானத்துக்கான போர் என்ற போர்வையில் மக்கள் செறிவாக வாழும் யாழ் குடாநாடு மீது கண்மூடித்தனமான எறிகணை மற்றும் குண்டு வீச்சுக்களுடன் சந்திரிக்கா ஆரம்பித்த போர் அது.



தமிழர்கள் எத்தனைபேர் கொல்லப்பட்டாலும், பரவாயில்லை சிங்கள மக்களின் நலனும், தனது அரசியலும் முக்கியமென சிங்களதேசம் தொடுத்தபோர். அனைத்துலக சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் அன்றும் பார்வையாளர்களாக இருக்க இலங்கை அரசு தான் நினைத்ததை செய்ய அன்றும் முடிந்தது, இன்றும் அது அதனை தான் செய்கின்றது.

இன்று இஸ்ரேல் அரசு தனது நாடும் தனது மக்களும் எவ்வாறு முக்கியம் என நினைத்து செயற்படுகின்றதோ அதனை ஒத்த நடவடிக்கை தான் அது. ஆனால் இன்று பாலஸ்தீனத்திற்கு அருகில் உள்ள முஸ்லீம் நாடுகளும், உலகில் உள்ள முஸ்லீம் மக்களும் ஆதரவாக உள்ளனர். ஆனால் எமக்கு அருகில் உள்ள இந்தியா தான் பிரதான எதிரியாக உள்ளது.

இந்த நிலையில் தான் ஹமாஸ் அமைப்பு ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு என துருக்கியின் அரச தலைவர் எர்டோகன் தெரிவித்த கருத்துக்கு இஸ்ரேல் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

முழு மேற்குலகமும் ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக கருதுகின்றனர். ஆனால் இஸ்ரேலை அவர்கள் அவ்வாறு பார்ப்பதில்லை. ஆனால் துருக்கி அவ்வாறு ஹமாஸை பார்க்காது. அவர்கள் விடுதலைப்போராட்ட அமைப்பு, பயங்கரவாதிகள் அல்ல. நிலத்தை பாதுகாக்க போரடுகின்றனர். இஸ்ரேல் குழந்தைகளை கொல்கின்றது அதனை நாம் அனுமதிக்க முடியாது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு மேற்குலகம் முழு ஆதரவுகளை வழங்குகின்றது. இஸ்ரேலையும், முழு உலகத்தையும் நான் ஒன்று கேட்கிறேன் நீங்கள் மேற்குலகத்திற்கு கடமைப்பட்டிருந்தால் ஹமாஸை பயங்கரவாதிகள் என கூறுங்கள் ஆனால் துருக்கி அப்படி செய்யாது என தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலுக்கான தனது பயணத்தையும் அவர் நிறுத்தியுள்ளதுடன், இஸ்ரேலுடன் மத்திய தரைக்கடல் ஊடாக மேற்கொள்ளவிருந்த எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்தையும் நிறுத்தியுள்ளார். இந்த திட்டம் இன்னும் சில வருடங்களில் ஆரம்பிக்கப்படவிருந்தது.

மேற்குலகத்திற்கும் கிழக்குக்கும் இடையிலான விரிசல்கள் அதிகரித்து வருவதையே எர்டோகனின் கருத்தும், மேற்கு நாடுகளின் தூதுவர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு லிபியா மேற்கொண்டுள்ள நடவடிக்கையும் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். ஹமாஸ் அமைப்பை பொறுத்தவரையில் மேற்குலக நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் அதனை தடை செய்யவில்லை. இந்தியா ஹமாஸ் அமைப்பை தடை செய்யவேண்டும் என்ற அழுத்தத்தை இந்தியாவுக்கான இந்திய தூதுவர் மேற்கொண்டு வருகின்றார். மேற்குலகம் தவிர ஹமாஸை கண்டித்த உலக நாடுகளில் இந்தியா மட்டுமே உண்டு.




இதனிடையே, இஸ்ரேலுக்கான படையின் பயணத்தின் போது தரையிறக்கப்பட்ட அமெரிக்காவின் சிறப்பு படையணிகளை சேர்ந்த கொமோண்டோ படையினர் இஸ்ரேலிய படையினருடன் இணைந்து காசாவுக்குள் நுழைந்த போது ஹமாஸ் படையினர் சுற்றிவளைத்து தாக்கி அழித்துள்ளதாக அமெரிக்காவின் பாது காப்பு செயலகமான பென்ரகனின் முன்னாள் ஆலோசகர் டக்ளஸ் மக்கிரகொர் தெரிவித்துள்ளார். இந்த படையினர் பணயக்கைதிகளின் இருப்பிடம் மற்றும் ஹமாஸ் படையினரின் பலம் தொடர்பில் புலனாய்வுத்தகவல்களை அறிவதற்காக சென்றவர்கள். தற்போதைய பாலஸ்தீன - இஸ்ரேல் மோதல் அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையிலான மோதலாக மாறலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடந்த மோதல்களில் கிஸ்புல்லா படையினர் 41 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் ஹசன் நஸ்ரெல்லா தெரிவித்துள்ளார். அதேசமயம், ஹிஸ்புல்லாக்களின் தொடர் தாக்குதல்களில் இஸ்ரேலின் பல டாங்கிகளும், பாதுகாப்பு நிலைகளும் அழிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், இஸ்ரேலிய இராணுவம் தமது நவீன மேக்காவா டாங்கிகளை ஹிஸ்புல்லாக்களின் கொனெற் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்காக பக்கவாட்டில் மேலதிக பாதுகாப்பு கவசங்களை பொருத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்றும் இஸ்ரேலின் நகரங்கள் மீது ஹமாஸின் ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இந்த நிகழ்வுகள் இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணைகள் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர் லெபனானை நோக்கி விரிவடைந்து வரும் நிலையில் சவுதி அரேபியாவின் அரசர் பின் சல்மான் அமெரிக்க அதிபருடன் மேற்கொண்ட பேச்சுக்களை தொடர்ந்து சவுதிஅரேபியா லெபனானில் உள்ள தனது இராஜதந்திரிகளையும், அவர்களின் குடும்பங்களையும் வெளியேற்றி வருகின்றது.

இஸ்ரேல் மற்றும் மத்தியகிழக்கில் உள்ள தனது 6 இலட்சம் மக்களை வெளியேற்ற அமெரிக்காவும் தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

செய்மதி படங்களின் அடிப்படையில் ஈராக்கில் உள்ள அமெரிக்க தளம் மீதான ஆளில்லாத தாக்குதல் விமானங்களின் தாக்குதல்களில் சேதமடைந்த தளத்தின் பகுதிகள் காணப்பட்டுள்ளன. இந்த தாக்குதலில் 4 அமெரிக்க படையினர் காயமடைந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதாவது மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க தளங்களையும் ஆபத்துக்கள் சூழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதனிடையே, மத்தியதரைக்கடலில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பலில் அதிகளவான ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் கொண்டுவரப்பட்டு தரையிறக்கப்படுவதாக தெரிவிக்கப்படும் அதேசமயம், எகிப்தும் தனது ஆயுதப்படைகளை தயார்படுத்தி வருகின்றது.



துருக்கியின் கருத்துக்கு கட்டார் அரசு தனது ஆதரவுகளை தெரிவித்துள்ள நிலையில் ஹமாஸ் அமைப்பை சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட பாலஸ்தீனப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை (26) ரஸ்யாவுக்கு சென்றுள்ளது இந்த போர் மற்றுமொரு பரிமாணத்தை நோக்கி செல்வதை காட்டுகின்றது. இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தும், பணயக்கைதிகளை விடுவிக்ககோரியும் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ரஸ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தினால் முறியடித்துள்ளன. அதனை முறியடிக்குமாறு ஈரான் இந்த இரு நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில் தீர்மானம் முறியடிக்கப்பட்டதற்கு தனது நன்றிகளை தெரிவித்துள்ள ஹமாஸ் அமைப்பு தற்போது ரஸ்யா சென்றுள்ளது மத்தியகிழக்கின் களமுனையில் ஏற்படப்போகும் மாற்றத்தை தான் காண்பிக்கின்றது.



1983களில் ஆப்கானிஸ்தான் நிலை கொண்டிருந்த ரஸ்யப்படைகளுக்கு எதிராக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

கொல்லப்பட வேண்டியவர்களே - அவர்கள் மனிதர்கள் அல்ல" என்ற மனநிலை ஏற்கனவே கொலைஞரிடையே உருவாக்கப்பட்டிருப்பதால் அவர்கள் மிக வேகமாக படுகொலைகளை அரங்கேற்றுவர். அரசொன்று இனப்படுகொலையினை முன்னெடுக்குமாயின் தான் உருவாக்கிப்பாதுகாத்து வைத்திருக்கும் ஆயுததாரிகளைக் கொண்டு கட்டுப்பாடுகள் எவையுமின்றி கொலைகளை மேற்கொள்ள அனுமதிக்கும்.

அதேவேளை இனப்படுகொலைக்கு உள்ளாகும் இனத்தவரின் மீது வெஞ்சினம் கொண்ட அதே இனத்தை சேர்ந்த ஆயுததாரிகளையும் "பழிதீர்க்கும் கொலைகள்" என்ற பெயரில் இனப்படுகொலையை நிகழ்த்த அரசு அனுமதிக்கும்.

**8. மறுத்தல்**

இனப்படுகொலையின் இறுதிப்படிமுறையாக இனப்படுகொலை நிகழ்ந்த பின்னர் அதனை மறுப்பதும் தொடர்ந்து நிராகரிப்பதும் நடைபெறும். இனப்படுகொலையைச் செய்தவர்கள் அதனை மறைக்க மனிதப் புதைகுழி களை உருவாக்குவர், உடலங்களை தீயூட்டுவர், ஆதாரங்களை இல்லாமல் செய்வர், சாட்சிகளை அமைதியாக்குவர்.

அதன் பின்னர் தம்மீது சுமத்தப்படும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்களை மறுதலிப்பதுடன் அதனை கொல்லப் பட்டவர்களின் மீதே சாட்டவும் செய்வர். படுகொலை யாளிகள் ஒருபோதும் தம்மீதான விசாரணைகளை அனுமதிப்பதில்லை. தாங்களே தொடர்ந்தும் அதிகாரம் மிக்கவர்களாக கோலோச்சுவதை எவ்வகையிலேனும் அவர்கள் செயற்படுத்த முனைவர். அவர்கள் அந்நாட்டில் இனப்படுகொலைகளைச் செய்து விட்டு நாட்டின் ஆட்சியில் அமர்ந்து அனைத்து முன்னுரிமைகளுடனும் வாழத் தலைப்படுவர்.

இனப்படுகொலையைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதுடன் இனப்படுகொலையாளிகள் தம்மைப் பாதுகாத்தும் கொள்ள இவ் எட்டுப் படிமுறைகளை பயன்படுத்துகின்றனர் என் பதை கலாநிதி. கிறகோரி எச். ஸ்டான்டன் வெளிப்படுத்தினார்.

இனப்படுகொலை தொடர்பான ஐ.நாவின் பன்னாட்டு நடைமுறைவரைபின் வரைவிலக்கணமானது மிகக் குறுகியது என்றும் 'இனப்படுகொலை" என்னும் வார்த்தை அந்நிகழ்வின் உண்மைப் பெறுமதியை எடுத்துரைக்கப் போதுமானதல்ல என்றும் எழுந்துள்ள பிரதிவாதங்களுக்கு மேலதிகமாக இப்பன்னாட்டு நடைமுறைவரைபில் 'பகுதியளவில்" என்பதன் உண்மை அளவுகோல் எது? அல்லது எண்ணிக்கையில் எத்தனை மரணங்கள் அல்லது கொலைகள்? நிகழ்ந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்கும் என்பது திட்டவட்டமாக கூறப்படவில்லை என்னும் பிரதிவாதமும் முன்வைக்கப்பட்டது.

என்றாலும் எத்தனை கொலைகள் நிகழ்ந்தால் அதனை இனப்படுகொலையாக கொள்ள முடியும் என்பது தொடர்பாக பொஸ்னிய இனப்படுகொலை வழக்குகளை விசாரித்த முன்னாள் யூகொஸ்லாவியாவிற்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் வழங்கியுள்ள தீர்ப்புகள் கருத்திற்கொள்ளத்தக்கதும் முடிந்த முடிபுகளானவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னால் யூகொஸ்லாவியாவிற்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயத்தில் இனப்படு கொலைக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்த ஜெனரல் ரடோவன் கரட்சிச் *(Radovan Karadzic)* தனது வாதமாக சுமார் 7000 தொடக்கம் 8000 வரையான முஸ்லிம் ஆண்கள் மற்றும் இளைஞர்களை கொன்றதற்காகவே தன்மீது இனப் படுகொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும் இவ் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிகச்சிறு அளவிலான கொலைகள் எனவும் எனவே இதனை இனப்படுகொலைக் குற்றமாகக் கருத முடியாது என்றும் வாதிட்டார்.

எண்ணிக்கையில் மிகக்குறைவான இக்கொலைகள் ஒரு இனத்தை முழுவதுமாகவோ அல்லது பகுதியளவிலோ துடைத்தழித்துவிடாது என்பதால் இப்படுகொலை இனப்படுகொலை அல்ல என்பதே அவரது வாதத்தின் பிரதான கருத்தாக இருந்தது.

எனினும் இவ்வாதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த தீர்ப்பாயம், இனப்படுகொலையை நோக்கமாகக் கொண்டு கொலைகள் நிகழ்த்தப்படுமாயின் அங்கு கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை முக்கியமற்றது என முன்னாள் யூகொஸ்லாவியாவிற்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் தனது தீர்ப்பை வெளிப்படுத்தியது.

அத்தீர்ப்பின் படி இனப்படுகொலையில் 'எண்ணிக்கை" என்பது "முக்கியமற்றது அல்லது அற்பமானது" என்பதுடன் கொலைகளுக்கான நோக்கமே முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பது வலுவாகியது.

ஆகவே கொலையொன்று இனப்படுகொலையாக உருவாக வேண்டுமாயின் அக்கொலையின் நோக்கம் அந்த இனத்தைத் துடைத்தழிப்பதாக இருப்பதே போதுமானது என்பதை நாங்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுள் ளோம்.

அடுத்த வாரத்தில் நான்காவது பன்னாட்டுக் குற்றமான ஆக்கிரமிப்பு தொடர்பாக அறிந்து கொள்வோம்.

**தொடரும்...**

## இந்தியப் படை ... தொடர்ச்சி ...

அந்த மருத்துவருடன் சேர்ந்து இந்திய இலங்கை ஒப்பந்தமும் உயிர்நீத்தது என்பது நடந்த வரலாற்றை மீள்பார்வையிடும்போது தெளிவாகத் தெரிகிறது.

ராஜீவ் காந்தி அரசின் ஒப்பரேஷன் பூமாலையில் இருந்துதான் இதெல்லாம் தொடங்கியது. கடைசியில் அது, குரங்கு கையில் கிடைத்த பூமாலை போன்று ஆனது வரலாற்றுச் சோகம்.

இதன் அடிப்படை, அகந்தையும் ஆணவமும்தான். பலம் பொருந்திய நம்மையே எதிர்ப்பதா - என்கிற அதிகாரத் திமிர். எந்த சாம்ராஜ்யமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஜாலியன் வாலா பாக் படுகொலைகளுக்கு அப்போதைய பஞ்சாப் ஆளுநர் டயர் தான் காரணம். (சுட்ட அதிகாரியின் பெயரும் டயர் தான்) 'காந்தியை நம்பி கூடுகிற இவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்' என்று அந்த டயரைத் தூண்டி விட்டவன் இந்த டயர் தான்.

இது தான், ஒரு பொது மருத்துவமனை மீது இந்தியப்படை நிகழ்த்திய தாக்குதலுக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். இதைப் புரிந்து கொள்ள வரலாறு குறித்த மீள்பார்வை அவசியம். ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை புலிகளால் தடுக்கவே முடியாது என்ற நம்பிக்கையை ராஜீவிடம் விதைக்கிறார்கள் தீட்சித் போன்ற அதிகார வர்க்கத்தினர். *Ruling Cast(e)*.அவர்களைப் பொறுத்தவரை பிரபாகரனும் புலிகளும் பொடியன்கள் *(Boys)*. ஒரு கட்டத்தில் *'Boys'* இல்லாமல் ஒப்பந்தம் இல்லை என்பது ராஜீவுக்கு தெரியவர, ராஜீவ் - பிரபாகரன் சந்திப்பு நடக்கிறது. வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன. அதை நம்பி ஆயுதங்களை ஒப்படைக்கிறார்கள் புலிகள். நம்பிய புலிகளின் முதுகில் குத்துகிற வேலையை இந்திய அதிகார வர்க்கம் தொடங்கியதும் பிரபாகரன் உஷாராகி விடுகிறார். அப்போதும், 'இந்திய துணைக்கண்டத்தின் இராணுவத்தைப் பொடியன்களால் என்ன செய்துவிட முடியும்' என்கிற அசட்டு நம்பிக்கை தான் அதிகார வர்க்கத்துக்கு இருந்தது. அந்த அதிகார மமதையின் விலை என்னவென்பது , 3 ஆண்டுகள் கழித்து, பெரும் இழப்புக்களோடும் அவமானத்தோடும் இந்திய அமைதிப்படை இந்தியா திரும்பியபோது தான் தெரிய வந்தது.




இந்தியப்படை உண்மையிலேயே ஆகப் பெரிய படைதான். அது கடலென்றால் புலிகளின் பலம் வெறும் குளம். ஆனால் புலிகள் தங்கள் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் போராடினார்கள் . இந்தியப் பெரும் படையோ, தீட்சித் போன்ற மூர்க்கத்தனம் கொண்ட அதிகாரிகளால், ஒரு கூலிப்படை ரேஞ்சுக்குக் குறுகிப் போய் நின்றது. அதுதான் அதன் தோல்விகளுக்குக் காரணம். ராஜீவ் காந்தி என்கிற மென்மையான மனிதர் இதையெல்லாம் புரிந்து கொண்டாரா இல்லையா என்பது இன்றுவரை புரியவில்லை. அவர் தீட்சித்தை நம்பினார். அதே தீட்சித்தைத் தான் இலங்கை அவரைக் காட்டிலும் அதிகமாக நம்பியது. ராஜீவுக்கு விசுவாசமாக இருந்தாரோ இல்லையோ, தீட்சித் என்கிற மனிதர் இலங்கைக்கு நூறு சதம் விசுவாசமாக இருந்தார். 'நசுக்கி விடுவோம்' என்று அவர் சொன்னதை இலங்கை நம்பியது. கடைசியில் நசுக்கப்பட்டது யாரென்கிற கசப்பான உண்மை வெளிவந்த போது, எதற்கும் பொறுப்பேற்க தீட்சித் முன்வரவில்லை. 'தீட்சித்' என்கிற அந்த சாதிசார் பின்னொட்டியோ என்னவோ, அந்த மனிதர் மீது நடவடிக்கை எடுக்க இந்தியா முன்வரவில்லை.

உண்மையில், அமைதிப்படை என்கிற பெயரால் இந்தியப்படை நடத்திய மானுடத்துக்கு எதிரான மூர்க்கத் தாக்குதல்கள் விசாரணைக்குரியவை. ஆனால், யாழ் மருத்துவமனை தாக்குதல் உள்ளிட்ட எந்தத் தாக்குதல் குறித்தும் இன்று வரை விசாரணையில்லை. எந்த அதிகாரியும் தண்டிக்கப்படவில்லை. எவரிடமும் விளக்கம் கேட்கப்படவில்லை. அதிகாரிகள் பலரின் பொறுப்பற்ற பார்வை குறித்து ஐ.பி.கே. எஃவ் பொறுப்பதிகாரி ஹர்கிரட்சிங் வெளிப்படையாக எழுதியிருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொருட்படுத்தப்படவேயில்லை. தீட்சித் தப்பிக்க வைக்கப்படுகிறார். தமிழ் மக்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்களுக்குப் பொறுப்புக்கூற இலங்கை முன்வராததைப் போலவே இந்தியாவும் முன்வரவில்லை. இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இதற்கெல்லாம் நீதி கேட்பதற்கான வழிமுறைகளைக் கூர்மைப் படுத்துவதில் தான், தமிழீழ விடுதலையின் எதிர்காலம் இருக்கிறது. நீதி கிடைத்தால் தான் நாடு கிடைக்கும்.

தான் செய்த துரோகத்தையும், தன்னுடைய கொலைவெறித் தாக்குதல்களையும் மூடி மறைத்துப் பூசி மெழுகப் பார்க்கும் இந்தியா, இனப் படுகொலைக் குற்றவாளி இலங்கையை எப்படிக் காட்டிக் கொடுக்கும். இந்த உண்மையை உணராமல், 'இந்தியா எதையாவது வாங்கிக் கொடுத்து விடும்' என்று பகல்கனவு காண்பவர்களைப் பார்க்கிறபோது பரிதாபமாக இருக்கிறது. இந்தியப் படையும், இலங்கைப் படையும் தமிழீழ மண்ணில் நிகழ்த்திய கொலை வெறியாட்டங்களுக்கான தண்டனையை அனுபவிக்கும் போது தான், ஈழ மண்ணில் விதையாய் வீழ்ந்திருக்கும் ஒவ்வொரு உயிருக்கும் நியாயம் கிடைக்கும்; லட்சக்கணக்கான மக்களின் ரத்தத்தால் சுத்திகரிப் பட்டிருக்கிற அந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்கும். • • •

## புறந்தள்ளப்படும் ... தொடர்ச்சி ...

தேவைகளுள் சிலவற்றையும் சுட்டிக்காட்டுகின்றார். தோட்டத்துறைக்கு வெளியே வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான வினைத்திறன்களை அவர்களிடையே அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு வெளியே சுயதொழில்களில் ஈடுபடுவதற்கும் வருமானம் உழைப்பதற்குமான அவர்களின் முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்தல். தோட்டங்களுக்கு உள்ளேயே மேலதிக வருமானத்தை உழைத்துக் கொள்வதற்குத் தேவையான வினைத்திறனை உருவாக்குதல். தோட்ட விவசாயத்திற்கும் வேறு உற்பத்தித்துறை நடவடிக்கைகளுக்கும் தேவையான வினைத்திறன்களை மேம்படுத்துதல். தோட்டங்களோடு தொடர்புடைய ஆதாரத் தொழில் சார்ந்த வினைத் திறன்களை மேம்படுத்தல். தோட்ட இளைஞர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலமும் பெண்களின் பங்கெடுப்பு, பால் தொடர்பான பிரச்சினைகள், மேலதிக வருமானத்தை உழைத்தல் என்பன பற்றிய அவர்களது அறிவினை வளர்ப்பதன் மூலமும் தோட்டக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் போன்ற பல விடயங்களையும் பேராசிரியர் சின்னத்தம்பி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மனிதவள அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யும் விதமான புதிய பயிற்சி நெறிகள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்தோடு பயிற்சி நெறிகளை தரமுயர்த்துதல், இளைஞர்களின் தொழில்சார் பயிற்சி, தொழிநுட்ப வினைத்திறன், பொது அறிவு என்பன உயர்த்தப்பட வேண்டும்.



இதற்கென அறிவுசார் பயிற்சி திட்டங்கள், மைய வினைத்திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள், தொழில்சார் பயிற்சித் திட்டங்கள், முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சித் திட்டங்கள், தோட்ட வேலைகளுக்கு பயன்படக்கூடிய பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை உரியவாறு அமுல்படுத்துவதன் ஊடாக பெருந்தோட்ட இளைஞர்களிடையே மனிதவள அபிவிருத்தி ஏற்படுவதோடு தேசிய நீரோட்டத்தில் சங்கமிப்பதற்கும் அது உந்து சக்தியாக அமையும் என்றும் வலியுறுத்தல் கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கங்கள் என்பன சமூகநலன்கருதி பல தொண்டுகளைப் புரிந்தாலும் இளைஞர் கள் முழுமையாக தமது சமூகத்தின் பிரச்சினை களை இனங்கண்டு முழுமூச்சுடன் சீரிய முறையிலே சிந்தித்து, தம்மை வளர்த்துக் கொள்வதன் மூலமாகவே சமூகத்தின் அபிவிருத்திக்கு வலுசேர்க்க முடியும். தன்னை வளர்த்துக் கொண்ட பின்னரே மற்றோருக்கு தொண்டு புரியவும் வழிகாட்டவும் ஒருவன் தகுதியுடையவனாகின்றான் என்ற புத்திஜீவிகளின் கருத்தும் ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும். இதனை இளைஞர்கள் புரிந்து செயற்பட வேண்டும்.

• • •

## இந்திய - அமெரி ... தொடர்ச்சி ...

எனினும் சீன கப்பலின் வரவை சிறிது காலம் தாமதப்படுத்துமாறு கேட்ட பின்னர் அவர் இலங்கை வந்திருந்தார். ஆனால் கப்பல் நவம்பர் மாதம் வருவதாக இருந்தபோதும் இலங்கை அரசு அதற்கு ஒக்டோபர் மாதம் அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த கப்பல் இந்து சமுத்திர பிராந்தியத்தின் கிழக்கு பகுதியில் 80 நாட்கள் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் அது 12,000 கடல்மைல்தூரவீச்சுக்களைகண்காணிக்ககூடியது எனவும் சீனா தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் யுவான் வாங் -5 என்ற ஆய்வுக்கப்பல் இலங்கை வந்தது இந்திய மட்டத்தில் கடும் எதிர்ப்பலைகளை தோற்றுவித்திருந்தது.

## ஹமாஸை பயங் ... தொடர்ச்சி ...

முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு இது தொடாபில் நாம் இழுத்தங்களை மேற்கொள்வோம். இது தொடர்பில் இந்தியாவுடன் முன்னரும் பேசியிருந்தோம். காசாவில் இடம்பெறும் குண்டு வீச்சக்கள் மத்திய கிழக்கில் நாம் தப்பி வாழ்வதற்கான நடவடிக்கை. அங்கு எம்மை சுற்றி இருப்பவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

நாம் பலவீனமானவர்களாக இருந்தால் எமது வாழ்க்கை முடிந்துவிடும். ஹமாஸ் அமைப்பிற்கான ஆயுதங்களையும், நிதி உதவிகளையும் ஈரான் மேற்கொண்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆம் நாள் இடம்பெற்ற தாக்குதலை தொடாந்து ஹமாஸின் நடவடிக்கையை கண்டனம் செய்த முதல் நாடாக இந்தியாவே உள்ளது. மேற்குலகம் தவிர்ந்த ஏனைய நாடுகள் கண்டனம் என்ற சொல்லை பயன்படுத்தவில்லை. ஹமாஸ் மேற்கொண்ட படுகொலைகளை கண்டித்த இந்தியா 3000 இற்கு மேற்பட்ட சிறுவர்களை இஸ்ரேல் படுகொலை செய்தபோதும் இஸ்ரேல் அரசை கண்டிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கனேடியர்களுக் ... தொடர்ச்சி ...

இந்தியா. 14 வகையான நுளைவு அனுமதிகளில் 4 வகையான நுளைவு அனுமதிகளே வழங்கப்படுகின்றன. மருத்துவம், மநாடு மற்றும் வர்த்தக தேவைகளுக்காக செல்பவர்களுக்கே நுளைவு அனுமதிகள் வழங்கப்படுகின்றன. வியாழக்கிழமை (26) இந்த சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இந்திய தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

ஐந்து கண்கள் என்ற புலனாய்வு அமைப்பினரே இந்த கொலையில் இந்தியாவின் பங்கு இருப்பதாக கனேடிய அரசுக்கு தெரிவித்திருந்தது. அதனை தொடர்ந்து கனடாவில் உள்ள இந்தியாவின் பாதுகாப்பு அதிகாரியை கனடா வெளியேற்றியிருந்தது. இந்தியாவும் கனடா இரஜதந்திரிகளை வெளியேற்றியிருந்தது. கடந்த வாரம் மேலும் 20 இரஜதந்திரிகளை கனடா மீள அழைத்திருந்தது.

## உலக போலியோ ... தொடர்ச்சி ...

செயல் பற்றிய முக்கிய விபரங் களை டாக்டர் ஞானகுணாளன் வழங்கினார்.

அத்துடன் இலங்கையில் இருந்து எவ்வாறு போலியோ நோய் ஒழிக்கப் பட்ட விதத்தையும் எடுத்துக் கூறினார்

சர்வதேச ரோட்டரி கழகத்தின் போலியோவை உலகில் இருந்து நீக்குவதற்கான செயல் பற்றிய முக்கிய விபரங்களை மாணவர்கள் கேட்டு அறிந்து கொண்டார்கள். மேலும், ரோட்டரி தலைவர் டாக்டர் சௌந்தரராஜன் நூலகத்திற்கு புத்தகங்களை வழங்கினார்.

## தவறான மருந்து ... தொடர்ச்சி ...

சிறுநீரகம் செயலிழந்ததால் உயிரிழந்தனர். இது அந்த நாட்டில் வாழும் 2.5 மில்லியன் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து மருந்தை ஆய்வு செய்த உலக சுகாதார நிறுவனம் மருந்தில் நட்சுத்தன்மையுள்ள *ethylene glycol, diethylene glycol* என்ற இராசாயணப்பொருட்கள் அளவுக்கு அதிகமாக இருந்ததாக தெரிவித்திருந்தது. இந்த இரசாயணப்பொருட்கள்காரின்பிறேக்ஒயிலுடன் கலப்பதற்கு பயன்படுத்தப்படுவதாகும்.

இந்திய நிறுவனம் மீது வழக்கை பதிவுசெய்துள்ள பாதிக்கப்பட்ட மக்கள் இறந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா 230,000 டொலர்கள் இழப்பீடாக தரப்படவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஹமாஸ் அமை ... தொடர்ச்சி ...

இதனிடையே, மேற்குலகத்திற்கும் கிழக்குக்கும் இடையிலான விரிசல்கள் அதிகரித்து வருவதையே எர்டோகனின் கருத்தும், மேற்கு நாடுகள்ின் தூதுவர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு லிபியா மேற்கொண்டுள்ள நடவடிக்கையும் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆறு இலட்சம் ... தொடர்ச்சி ...

கொனெற் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்காக பக்கவாட்டில் மேலதிக பாதுகாப்பு கவசங்களை பொருத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம், இஸ்ரேல் மற்றும் உக்ரைனுக்கு பைடன் வழங்கவிருந்த 106 பில்லியன் டொலர்களை அமெரிக்காவின் செனற்சபை தடுக்கலாம் என்ற கருத்துக்கள் எழுந்துள்ளதாக பொலிற்றிக்கோ ஊடகம் தெரிவித்துள்ளது. குடியரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் பிளவு காரணமாக வாக்குகளை ஒருங்கிணைப்பது கடினமாகது என அது மேலும் தெரிவித்துள்ளது.

## மற்றோர் நல்லெ ... தொடர்ச்சி ...

ஐக்கிய நாடுகள் சபை கைகட்டி பார்த்துக் கொண்டு இருந்ததுடன், அதன் பின்னர் ஐ.நா தவறிழைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்த போதும் அந்த தவறை இழைத் தவர்கள் தண்டிக்கப்படவில்லை. அன்று அதற்கான தண்டனைகள் வழங்கப்பட்டிருந்தால். இன்றைய பேரவலத்தை சிலசமயங்களில் தடுத்திருக்க லாமோ என்னவோ.

தமிழ் மக்களைப் போலவே இழந்த தமது மண்ணுக்காக குருதி சிந்தும் அந்த மக்களுக்காக தமிழீழம் தனது ஆதரவை எப்போதும் வழங்கும். அவர்களின் போராட்டம் வெற்றிபெறவேண்டியது ஏனைய போராடும் இனங்களுக்கு ஒரு உந்துசக்தியாக அமையும்.

இந்த நிலையில் 1991 ஆம் ஆண்டு ஸ்பெயினில் இடம்பெற்ற இஸ்ரேல் - அரபு உலக பேச்சுக்களைதொடர்ந்துஎட்டப்பட்டஉடன்பாடு குறித்து அன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் வே. பாலகுமாரன் அவர்கள் எழுதிய பத்தியின் இறுதிப் பகுதியை இங்கு கூறுவது பொருத்தமானது.

போராடும் தன்மையை இழந்து மாற்றான் நல்லெண்ணத்தைமட்டும்நம்பிபோராடவிரும்புவோரை மழுங்கடிக்கப் பயன்படப்போகும் உடன்பாடு உருவாக்கப்போகும் பின்விளைவுகள் விபரீதமாக அமையும் அபாயம் கூடவேயிருப்பதை நாம் சுட்டாமல் இருக்க முடியாது. எனவே சொந்தக் காலில் சொந்த தாயகத்தில் போராடுவோரே இலக்குகளை அடைவார் என்பதை நாம் சொல்லாமல் இருக்கமுடியாது என கூறியிருந்தார்.

அவர் கூறிய தீர்க்க தரிசனத்தின் உண்மையை இன்று நடக்கும் போர் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் இந்த உண்மை இன்று எமக்கும் பொருந்தும் என்பதே யதார்த்தம்.

## இஸ்ரேல் - காஸா ... தொடர்ச்சி ...

எவ்வாறான பண்பாட்டுப் பின்புலங்களிலிருந்து அவர்கள் வருகிறார்கள் என்பதையுமே வெளிப் படுத்துகின்றன.

வரலாற்று ரீதியாக, யூத மக்களுக்கு எதிரான பார்வையும் இஸ்லாமிய மக்கள் மீதான வெறுப்பும், மேற்குலக பண்பாட்டுக் கருத்துருவாக்கத்தின் முக்கிய விடயங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. முஸ்லீம் மக்கள் இன்று எவ்வாறு இனத்துவரீதியாக வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுகிறார்களோ அவ்வாறு தான் யூத மக்களும் ஒரு காலத்தில் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டார்கள். அவ்வப்போது இனக் கலவரங்களாலும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் ஹிட்லரினால் இரண்டாம் உலகப் போர்க் காலத் தில், யூத மக்கள் இலட்சக்கணக்கில் கொல் லப்பட்ட பின்னர், யூத மக்களை வெறுக்கும் அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்ற நிலைக்கு மேற்குலகம் வந்தது.

இதற்கு மாறாக அரபு மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் எதிரான உணர்வுகள் இவ்வாறு தணிக்கைசெய்யப்படவில்லை. அமெரிக்காவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 'பயங்கரவா தத்துக்கு எதிரான போர்' இவ்வாறான உணர்வுகளை மென்மேலும் அதிகரித்திருக்கிறது. பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போரை இஸ்ரேலும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போராகவே காட்சிப் படுத்துகிறது.

இவ்வாறான ஒரு பின்புலத்தில், யூத மக்களின் மனிதத்தை ஏற்றுக்கொள்வதாயின் முஸ்லீம்கள் என்றோ அரேபியர்கள் என்றோ அழைக்கப்படுபவர்களின் மனிதம் களையப் படுவதையே அது குறிக்கிறது என்று மேற்குலகில் உள்ள பலர் நம்புகிறார்கள்.

இஸ்ரேல் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அதற்கு உரிமை உண்டு. இதற்காகப் பாலஸ்தீன மக்கள் மீது எவ்வகையான அட்டு ழியங்களும் மேற்கொள்ளப்படலாம் என்ற சிந்தனை அந்த தேசம் உருவாக்கப்பட்ட காலத் தில் இருந்தே இருந்துவருகிறது. இஸ்ரேல் மக்கள் பாதுகாப்பாகவும் அமைதியாகவும் வாழ்வதற்காகப் பாலஸ்தீனம் எவ்வகையான விலையையும் கொடுக்கலாம் என்ற பார்வையை மேற்குலகம் கொண்டிருக்கிறது.

இதற்கு மாறாக, இஸ்ரேலின் மீது ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலின் பின்னணியைக் குறிப்பிடுவதையே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக மேற்குலகத்தால் பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அண்மையில் தெரிவித்த கருத்துகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இஸ்ரேல் - காஸாப் போர் தொடர்பாக மேற்குலக ஊடகங்கள் மேற்கொள்ளும் பதிவு கள் அத்தனையுமே இந்தப் பண்பாட்டு முரண் பாட்டைப் பிரதிபலிக்கின்றன. இஸ்ரேல் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகக் கடுமையான கண்டனம் பதிவு செய்யப்படும் அதே நேரம், பாலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துன்பங்களோ எந்தவித முக்கியத்து வம் கொடுக்கப்படாமல் இருட்டடிப்பு செய்யப் படுகின்றன.

சாவுகளைப் பதிவுசெய்யும் போது இவ் வகையான கணிப்பீடு வெளிப்படுகின்றது. பாலஸ்தீன மக்களின் சாவுகள் தொடர்பான செய்திகள் சமூகவலைத்தளங்களிலும் தொலைக் காட்சிச் செய்தியறிக்கைகளிலும் மிகவும் அதிக மாகப் பதிவுசெய்யப்படுகின்றது. இஸ்ரேல் மக் களின் சாவுகள் இவற்றில் அதிகம் பதிவுசெய் யப்படவில்லை. அதே நேரம், தலை வெட்டப்பட்ட குழந்தைகள் பற்றிய செய்தி ஒன்றே இஸ்ரேல் மக்களின் சாவைப் பதிவுசெய்யப் போதுமானதாக இருக்கின்றது. பாலஸ்தீன மக்களின் குரூரமான சாவுகளைப் பதிவுசெய்ய மிக அதிகமான விட யங்களை முன்வைக்க வேண்டி யிருக்கிறது.

மேற்குலக அரசுகள் ஹமாசை ஒரு பயங்கரவாத அமைப்பாக வரையறைசெய்திருக் கின்றன என்ற செய்தி மேற்குலக ஊடகங்களால் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்படுகின்றது. அதே நேரம் இஸ்ரேல் இனவெறி பிடித்த ஒரு அரசு என்பதைப் பதிவுசெய்ய மனித உரிமை அமைப்புகளும் ஐக்கிய நாடுகளும் தயங்குகின்றன.

இஸ்ரேல் மேற்கொள்ளும் செயற்பாடு களுக்கு எதிராக விமர்சனங்கள் முன்வைக்கப்படும் போது, அவை யூத மக்களுக்கு எதிரானதாக சித்தரிக்கப்படுகின்றது. அரபு மக்களுக்கு எதிராக வெளிப்படுத்தப்படும் உணர்வுகளை விட இது மிக மோசமானதாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு சொன்னபின்னர், பண்பாடு என்பது ஒரு கூட்டுச்சேர்க்கை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அது எப்போதும் தெளிவானதாக இருப்பதில்லை. எனவே குறிப் பிட்ட பண்பாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு தனி நபரும் இதனை ஏற்றுக்கொள்கிறார் என்று பொருள் கொள்ள முடியாது.

பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக அமெரிக்காவிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் ஊடகங்களின் மனப்பாங்குகளில் பண்பாடு தாக்கம் செலுத்து கின்றது என்ற உண்மை ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். அதே நேரம் ஊடகவியலாளர் களுக்கு அது ஒரு வரையறையையு ம் தருகிறது.

தங்களைப் போலவே இருக்கின்ற, தங்களைப் போலவே சிந்திக்கின்ற ஒரு பார்வை யாளர் இருந்த காலத்திலேயே ஊடக அறநெறிக் கோட்பாடுகள் வரையறை செய்யப்பட்டன என்ற உண்மையை ஊடகவியலாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று, செய்தியறிக்கைகள் உலகம் முழுவதிலும் உடனடியாக ஒலிபரப்பப்படும் போதோ அன்றேல் ஒளிபரப்பப்படும் போதோ, பண்பாட்டுக் குருட்டுத்தனங்கள் அறநெறிக் கோட்பாடுகளுக்கு எதிரானவையாகப் பார்க்கப் படக்கூடும். இனவழிப்பு மற்றும் இனச்சுத் திகரிப்புகள் இவற்றுள் அடங்கும். செய்திகளை அவர்கள் வடிவமைக்கும் முறைகள் தொடர் பாகவும் செய்திகளை அவர்கள் பதிவுசெய்யும் முறைகள் தொடர்பாகவும் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஊடகவி யலாளர்கள் கவனமாகச் செவிமடுக்க வேண்டும். உண்மையில் அவ்வாறு செய்வதாயின் தன்-விழிப்புணர்வு ஊடகவியலாளர்களுக்கு அவசிய மானதாகும். ஊடகவியலாளர்கள் பலர் இந்த தன்-விழிப்புணர்வை வெளிப்படுத்தத் தவறிவி ட்டார்கள் என்பதே யதார்;த்தமாகும்.

**நன்றி: அல்ஜஸீரா**

## "ஷி யாங் 6" ... தொடர்ச்சி ...

அதிகரித்துவரும் சீனாவின் ஆதிக்கத்தை தடுக்க இந்தியாவுக்கு உதவும்.

இரண்டாவதாக, பிராந்தியத்தில் உள்ள தனது நட்பு நாடுகள் மற்றும் பங்காளிகளுடன் இந்தியாதனது உறவுகளைவலுப்படுத்த வேண்டும். இதில் அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் அடங்கும். சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்வதற்கான பொதுவான மூலோபாயத்தை உருவாக்க, பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் இந்தியாவும் இணைந்து பணியாற்ற முடியும்.

மூன்றாவதாக, "ஷி யாங் 6" மற்றும் சீனா வின் வளர்ந்து வரும் செல்வாக்கு பற்றிய தனது கவலைகளை விளக்குவதற்கு இலங்கை மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடன் இந்தியா நெருக்கமாகச் செயற்பட வேண்டியிருக்கும். இந்த பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது அவர்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் என்பதை இந்தியா இந்த நாடுகளை நம்ப வைக்க வேண்டும்.

இறுதியாக, இந்தியா தனது சொந்த பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு திட்டங் களை பிராந்தியத்தில் உருவாக்க வேண்டும். இதன் மூலம் இலங்கை போன்ற நாடுகள் சீனாவை சார்ந்திருப்பதை குறைக்கவும், பிராந்தியத்தில் தனது செல்வாக்கை அதிகரிக்கவும் உதவும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார நலன்களுக்காகவும், ஐ.நா. போன்ற அரங்குகளில் வரக்கூடிய ஆபத்துக்களை எதிர்கொள்ளவும் சீனாவைத்தான் சார்ந்துள்ளது. அதனால், சீனாவின் விருப்பத்துக்கு முரணாக அதனால் செயற்பட முடியாது.

"ஷி யாங் 6" கப்பலின் கொழும்பு வருகை இந்தியாவிற்கு ஒரு எச்சரிக்கை மணி. சீனா முன்வைக்கும் சவாலை இந்தியா தீவிரமாக எடுத்துக் கொண்டு அதை எதிர்கொள்ள விரிவான உத்தியை உருவாக்க வேண்டும்.

• • •

## தமிழர்கள் ... தொடர்ச்சி ...

எவ்வாறாயினும் பண்ணையாளர்களின் பிரச்சினையை தீர்ந்துபோகச்செய்வதற்காகவும் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதற்காகவும் கிழக்கில் தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராக செயற்படுவதாக நாடுமுழுவதும் காட்டி வன்முறையொன்றை ஏற்படுவத்துவதன் மூலம் மீண்டும் ஆட்சி அதிகாரத்தினை பிடிப்பதற்காகவும் என பல்வேறு வழிமுறைகள் இன்று கிழக்கில் கையாளப்பட்டுவரும் நிலையில் தமது நில உரிமையினையும் தொழில் உரிமையினையும் வலியுறுத்தி 43வது நாளையும் தாண்டி போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றன.

பல்வேறு அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத் தல்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டத்திற்கு வடக்கு கிழக்கு என அனைத்து பகுதிகளிலும் குரல்கள் எழுப்பப் படவேண்டும்.அதன்மூலமே மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கான குரல் கள் சர்வதேசத்தில் எழும்பும் நிலைமை ஏற்படும்.

• • •

## வடக்கு மீனவர் ... தொடர்ச்சி ...

நாங்கள் போராடுகின்றபோது. எங்களை சாந்தப்படுத்துகின்றார்களே தவிர இந்தியாவிடம் இருந்து 13 ஆவது தீர்வை பெற்று கொள்ள முயற்சிக்கிறார்கள் தவிர இந்த மீனவர்கள் பிரச்சனைகளை இரண்டாம் பட்சமாக கையாளு கிறார்கள்.

• • •

## எதிரியின் பலம் ... தொடர்ச்சி ...

போராடிய முஜாகுதீன் போராளிகளை அமெரிக்கா அரசு அன்று வெள்ளைமாளிகைக்கு அழைத்து ஆயுதங்களை வழங்கிய நிகழ்வுக்கு ஒப்பானது இது.

அதேசமயம், இஸ்ரேல் மற்றும் உக் ரைனுக்கு பைடன் வழங்கவிருந்த 106 பில்லியன் டொலர்களை அமெரிக்காவின் செனற்சபை தடுக்கலாம் என்ற கருத்துக்கள் எழுந்துள்ளதாக பொலிற்றிக்கோ ஊடகம் தெரிவித்துள்ளது. குடியரசுக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் பிளவு காரணமாக வாக்குகளை ஒருங்கிணைப்பது கட்சிக்கு கடினமானதாக உள்ளது. நாடாளுமன்ற பேச்சாளரை கூட நியமிக்கமுடியாத நிலையில் அமெரிக்காவின் அரசியலும், தனது கூட்டணி நாடுகளுக்கு தொடர்ந்து பொருளாதார உதவிகளை வழங்க முடியாத நிலையில் அமெரிக்காவின் பொருளாதாரமும் தேக்கமடைந்துள்ள நிலையில் மத்திய கிழக்கில் திறக்கப்பட்டுள்ள களம் ஒரு காத்திரமான மாற்றத்தை கொண்டுவரும் என்பதை தான் நடக்கும் சம்பவங்கள் காட்டுகின்றன.

• • •